Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: [illegible] 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 பிரமோதூத ஹூ வைகாசி மீ 15 ஆம் உ செவ்வாய்க்கிழமை (29 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹ 04 ஓசை 100

## குரங்குப் பாலம் முகாமில் இராணுவம் குவிப்பு; கடற்படை பயிற்சி; மக்கள் பீதி

(திருக்கோணமலை)

திருமலைக்கும் - தம்பலகாமம் பகுதிக்கும் இடையிலுள்ள 'மங்கீ பிறிஜ்' (குரங்குப் பாலம்) என்னும் இராணுவ முகாமில் பெரும் தொகையான இராணுவத்தினர் குவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இது ஒரு பயிற்சி முகாமாக இருந்தாலும், பெருந் தொகையான இராணுவத்தினர் - அதுவும் கறுத்த சீருடை அணிந்தோர் - (விசேட அதிரடிப்படையினர்) இங்கு குவிக்கப்படுவது தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித பயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை கடந்த ஞாயிறு இரவு திடீரென்று கடற்படைத் தளத்திலிருந்து பாரிய குண்டு ஒன்று வெடித்த சத்தமும் அதையடுத்து அடுத்தடுத்துப் பல வெடிச் சத்தங்களும் கேட்டன. 'கண்போட்' டில் இருந்தும் வெடிக்கும் சத்தமும் கேட்டதாம். இதனால் நகர மக்கள் பீதியடைந்தனர். (6ஆம் பக்கம் பார்க்க)

## காட்டிக் கொடுப்போர் என எவரும் இருக்கக் கூடாது

(வவுனியா)

இனி வரும் போராட்ட காலத்தில் காட்டிக் கொடுப்போர் என்றுஎவரும் இருக்கக் கூடாது இவர்களை இனங் கண்டு மக்கள் களைய வேண்டும்.

வவுனியா பண்டாரி குளத்தில் நடைபெற்ற இணக்க மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் வவுனியா நகரப் பொறுப்பாளர் திரு. ஞானம் மேற்கண்டவாறு (6 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்கு நீரிணையில் வைத்து கடத்தல் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

பாக்குநீரிணைக்கடல் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இரு கடத்தல் படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினார்கள் ஒன்பது பேர் கைதானார்கள்.

ஒரு படகு வடபகுதியிலிருந்து தமிழகம் சென்றுகொண்டிருந்தபோது கடற்படையினர் வழிமறித்து பிடித்தனர் அதில் டெக்குகள், சுசட்டுக்கள், கராம்பு போன்ற பல லட்சம் ரூபாபெறுமதியான (6ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பிடிக்கப்பட்ட படம். இதில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, யாழ். மாவட்ட பிரதித் தளபதி ஜெயம், மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி ஆகியோருடன் இலங்கையின் நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தையும் காணலாம்.

படம்: சிவா

## பத்திரிகை ஆசிரியர் திடீர் பதவி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் நான்கு பத்திரிகைகளில்ஒன்றான சிறிய பத்திரிகையொன்றின் ஆசிரியர் "மூன்றாந்தரப் பத்திரிகையாளர் என்று முத்திரைகுத்தி அப்பத்திரிகை நிறுவனத்தின் ஆளுநர் நாயகத்தினால் நேற்றுத் திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவரை அலுவலகத்திற்குள் கால் வைக்க வேண்டாமென்று கட்டளையிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# அவகாசத்துக்கு இனி இடமில்லை; உருப்படியான செயல் தேவை!

## தனிநாயகம் அடிகளாருக்கு சிலை

(நெடுந்தீவு)

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாந்திகதி நெடுந்தீவில் அமரர் தமிழ்த்தூது அருட்திரு தனிநாயகம் அடிகளாருக்குச் சிலை நிறுவ நெடுந்தீவு மக்கள் முன்வந்துள்ளனர். நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார், தமிழுக்கு ஆற்றிய தொண்டினை நினைவு கூருவதுடன், அவர் பணியைத் தொடர நமக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் இச் சிலை நிறுவும் நிகழ்ச்சி

(6ஆம் பக்கம் பார்க்க)



## அமைச்சர் ஹமீத்திடம் புலிகள் திட்டவட்டமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவது குறித்தோ அல்லது மாகாணசபை

## உதவிகளை அதிகரிக்கும்படி அரபு நாடுகளுக்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீ லங்காவுக்கான பொருளாதார உதவிகளை அதிகரிக்கும்படி சகல அரபு நாடுக

சரீப் ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்தபோது, அரபு நாடுகளின்

# உருப்படியான செயல் தேவை!

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார், தமிழுக்கு ஆற்றிய தொண்டினை நினைவு கூருவதுடன், அவர் பணியைத் தொடர நமக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் இச் சிலை நிறுவும் நிகழ்ச்சி

(6ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளை நேற்று யாழ்.நகரில் சந்தித்துப் பேசிய பின் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் விடைபெற்றுச் செல்கிறார். அவருக்கு முன்னே திரு. மகேந்திரராசா (மாத்தயா)வும் திரு. அன்ரன் பாலசிங்கமும் பின்னே கண்ணாவும் நிற்கின்றனர். படம்: சிவா

## அமைச்சர் ஹமீத்திடம் புலிகள் திட்டவட்டமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவது குறித்தோ அல்லது மாகாணசபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்துவது குறித்தோ இனி எந்தவித பேச்சுக்களுக்கும் இடமில்லை அரச தரப்பிலிருந்து மிக விரைவில் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கும் அமைச்சர் ஹமீத்திற்கும் இடையிலான பேச்சு வார்த்தையின்போது விடுதலைப் புலிகளால் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் இச்சந்திப்பின் போது சமீபகாலமாக நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட சூன்ய நிலை குறித்தும் அதற்கான காரணங்கள் பற்றியும் விடுதலைப் புலிகள் தரப்பால் எடுத்துக் கூறப்பட்டதுடன் இவ்வளவு காலமும் இருந்து வந்த அரசியல் வெறுமை நிலையை உடன் நீக்க வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பால் வலியுறுத்திக் கூறப்பட்டது என நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் திரு, அன்டன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உதவிகளை அதிகரிக்கும்படி அரபு நாடுகளுக்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீ லங்காவுக்கான பொருளாதார உதவிகளை அதிகரிக்கும்படி சகல அரபு நாடுகளுக்கும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

உலக இஸ்லாமியர் சங்கத்தின் செயலாளர் ஜனாப் முகமட் அஹெமெட் அல் சரீப் ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் பிரதிநிகள் அவரைச் சந்தித்தபோது, அரபு நாடுகளின் ஸ்ரீ லங்காவுக்கான உதவிகளை அதிகரிப்பதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளை மக்களே உருவாக்குதல் வேண்டும்

(தீவுப் பகுதி)

ஒவ்வொரு போராளிகளையும் மக்களே உருவாக்க வேண்டும். இந்த மண்ணையும், இந்த மக்களையும் காப்பதற்கு உங்களால் உருவாக்கப்படும் போராளிகளாலேயே முடியும். இலங்கையின் அரசியல் சூழ்நிலை எப்படியாயினும் நாம் போராட்டத்திற்கு தயாரான நிலையிலே உள்ளோம். மக்கள் எவ்வித அச்சமுமின்றி எம்மோடு சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## போர் முனைப்புக்குக் காரணம்? அரசின் செயல்களே

### படையினருக்கு புலிகள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமில் நேற்று மாலை விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் இடையில் இரண்டுமணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப் பேச்சுவார்த்தையின் போது நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் உடனிருந்தார்.

இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் யோகரெட்ணம் யோகி, யாழ். மாவட்ட பிரதித் தளபதிஜெயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலவரங்கள் பற்றி முக்கியமாகப் பேசப்பட்டது. அதேவேளை விடுதலைப்புலிகளதும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் சில நடவடிக்கைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இப் பேச்சின் போது தமது நடமாட்டத்திற்கு விடுதலைப் புலிகளால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு பற்றி இராணுவ தரப்பினர் முறையிட்டபோது இராணுவ நடமாட்டத்தால் சில தவிர்க்க முடியாத அசம்பாவிதங்கள் தோன்றும் என்றும் இதனால் அமைதிச் சூழ்நிலை பாதிக்கப்படலாம் எனவும் இதனாலேயே நடமாட்டத்திற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எனவும் புலிகளால் தெரிவிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கு பிரதேசசபை மீண்டும் பருத்தித்துறை பிரதேச சபை நிர்வாகத்தினுள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச சபையின், நிர்வாகம், திரும்பவும் பருத்தித்துறை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்பட்டதையடுத்து, கடந்த ஆண்டு முதல் வடமராட்சி கிழக்கு தனியான பிரதேச சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அதற்கான விசேட ஆணையாளரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

கடந்த பல மாதங்களாக தனியான பிரதேச சபையாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறைமுகத்தில் கடத்தல் பொருள் பிடிபட்டது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 15,000 குரோஸ் சேட் பொத்தான்களையும் 6,000 யார் லேஸ்சையும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து கடத்த முயன்ற முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுங்கக் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

முஸ்லிம் வர்த்தகர் வழக்கமான ஒரு கடத்தல் பேர்வழி என்றும, இங்கிருந்து அந்நிய நாணயங்களை சிங்கப்பூருக்கு எடுத்துச் சென்று விற்றபின் அங்கிருந்து ஆடம்பரப்பொருட்களை வாங்கி வந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட ரீதியாக ஆசிரிய இடமாற்ற சபைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாவட்டங்கள் தோறும் தனித்தனி ஆசிரிய இடமாற்ற சபைகள் அமைப்பதற்கான துரித நடவடிக்கைகளை வட-கிழக்கு மாகாணசபையின் கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இதற்குரிய சிபாரிசுப் பட்டியல்கள் ஏற்கனவே கல்வியமைச்சின் பரிசீலனையில் இருப்பதாகவும் இப் பெயர்ப் பட்டியல்கள் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதும் ஆசிரிய இடமாற்றங்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**சத்தீஸின் *A/L* இரசாயனம்**

பரீட்சை

மாதிரி வினாக்களும் விடைகளும்

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளூராட்சிச் சபைகளுக்கு இவ்வருட முடிவிற்குள் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை, மூன்று நகரசபைகள் பன்னிரெண்டு யாழ்ப்பாண பிரதேச சபைகள் மூன்று கிளிநொச்சி பிரதேசங்கள் ஆகியவற்றிற்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலை இவ்வருட முடிவுக்குள் நடத்தி முடிப்பதற்காக பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கும்படி கொழும்பு, தேர்தல் ஆணையாளரிடம் இருந்து யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் முதற்படியாகயாழ்ப்பாணம்கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள திணைக்கள தலைவர்களிடம் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை இம் மாவட்டங்களில் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் போன்ற பல விபரங்களை சேகரித்து அனுப்பும்படி பணிக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பருப்பு, வெங்காயம்; தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் பெரிய வெங்காயம், பருப்பு என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

இரண்டு கப்பல்களில் இந்த உணவுப் பொருட்கள் அடுத்த சில தினங்களில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேர விருப்பதாக கூட்டுறவுமொத்த விற்பனை நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

துருக்கியில் இருந்து நாலாயிரத்து முன்னூறு தொன் பருப்பை ஏற்றிக் கொண்டு கப்பல் வருகிறது.

இவற்றுக்கான கொள்வ

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரிசியின் விலை இறக்கம் சாப்பாட்டின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரிசியின் விலையை அரசாங்கம்குறைத்ததாகஅறிவித்துள்ள போதிலும் யாழ், நகரில் உள்ள உணவுக்கடைகளில் சாப்பாட்டின் விலை இருபது ரூபா என விளம்பரம் போடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பதினெட்டு ரூபாவாக இருந்தது,

இதேசமயம் மாவில் தயாரிக்கும் தின்பண்டங்களின் விலை இன்னமும் அதிகரிக்கப்படவில்லை.

இதுபற்றி தாம் ஆராய்ந்து வருவதாத உணவுக்கடைகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல சீனி விலை குறைந்தும் தேனீர் விலை குறைக்கப்படவில்லை.

### டயர் திருடன் பிடிக்கப்பட்டான்

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பகுதியில் உழவு இயந்திரங்களின் டயர்கள்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# செல்வி ஜக்குலின் சேவைக்கு பொதுமக்கள் பாராட்டு

(பருத்தித்துறை)

''இந்திய இராணுவம் எமது பகுதிகளில் அட்டூழியங்களை புரிந்து மக்களைக் கொன்றும், காயப்படுத்தியும் அல்லற்படுத்திய காலகட்டத்திலே பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவினதும், வைத்திய சேவைக் குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலினினதும் அரும்பெருஞ் சேவைகள் எமக்குக் கிடைத்தது வரப்பிரசாதமாகும்.

இந்தச் சேவைகளை அல்லற்பட்ட எமது மக்களுக்கு வழங்குவதற்காக இக்குழுவை அனுப்பிவைத்த பிரான்ஸ் அரசாங்கத்திற்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இவ்வாறு புலோலி புற்றளை மத் மகாவித்தியாலயத்தில் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இணைப்பதிகாரி செல்வி ஜக்குலின் சேவைகளைப் பாராட்டி பொது மக்களால் நடாத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்திலே உரையாற்றிய இளைப்பாறிய கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா குறிப்பிட்டார்.

விழாவிற்கு புலோலி கொத்தணி அதிபர் திரு. வி சே. ஏகாம்பரநாதன் தலைமை தாங்கினார் விழாவிலே இணைப்பதிகாரி செல்வி ஜக்குலின் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்.

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு மாணிக்கவாசகர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

வேறொரு நாட்டிலிருந்து எமது நாட்டிற்கு வந்து மிக இக்கட்டான காலகட்டத்திலே எமது மக்களுக்குச் சேவையாற்றிய பிரான்ஸ் வைத்திய சேவைக்குழுவையும், அதன் இணைப்பாளர் செல்வி. ஜக்குலினையும் அவர்கள் வழங்கிய சேவைகளுக்காகப் பாராட்ட வேண்டியது முக்கியமாகும்.

இந்திய இராணுவ அட்டூழியங்களினால் ஸ்தம்பித்திருந்த வடமாரட்சிப் பகுதியில் வைத்திய சேவைகளைப் பெற மக்கள் இன்னல்களை அனுபவித்தபோது இப் பிரான்ஸ் வைத்திய சேவைகள் குழு ஆற்றிய சேவைகளை பாராட்டிப் பேசினார்.

செல்வி ஜக்குலின் பதிலுரையின் போது குறிப்பிட்டதாவது. தமிழை நான் நன்கு நேசிக்கின்றேன். ஆனால் எனக்குத் தமிழில் பேச முடியாமைக்கு மிகக் கவலையடைகின்றேன். தமிழ் மக்களின் விருந்தோம்பல், பண்பாடுகளை நான் மிகவிரும்புகிறேன் நான் இப்பகுதியில் மேற்கொண்ட சேவைகளுக்காக நீங்கள் என்னைப் பாராட்டுவதனால் நான் மிகமகிழ்ச்சியடைகின்றேன். எனக்குறிப்பிட்டார்.

செல்வி. ஜக்குலினுக்குப் பொது மக்கள் சார்பில் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன திரு. எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்களின் 'காத்தவராயன்' நாடகமும் இடம் பெற்றன பருத்தித்துறை தபால் அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியமும் உரையாற்றினார். (25)

## மின் கட்டண நிலுவை

(களுவாஞ் க்குடி)

களுவாஞ்சிக்குடி பிரதேச சபைக்கு மின்பாவனையாளர்களிடமிருந்து பல லட்சம் ரூபா மின்கட்டண நிலுவை இருப்பதால் அவற்றைச் செலுத்துமாறும் இல்லையேல் மின் துண்டிக்கபபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் குருக்கள் மடம் தொடக்கம் களுவாஞ்சிக்குடி வரையும் உள்ள பிரதான வீதியிலுப மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பஸ்நிலைய மின்விளக்குகளும் இரவில் எரிகின்றன. (37)

## அபிவிருத்திவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பொருளாதார முன்னேற்றம் இறால் வளர்ப்பிலும்தங்கியுள்ளது. இறால் வளர்ப்பு மூலம் பொருளாதர வளர்ச்சி மட்டுமல்லவேலை வாய்ப்புக்களையும்உருவாக்க முடியும்.

இவ்வாறு பாலையடித்தோனா விவசாய உற்பத்தி மாதிரிக்கிராம அபிவிருத்தி விழாவில் பிரதம அதிதிரிகளில் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றிய மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. இரா. தியாகராசா கூறினார்.

வாழைச்சேனை உதவி அரச அதிபர் திரு. எஸ். வரதராஜன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. எஸ். சுந்தரமூர்த்தி (அதிபர்) வி. கனகரெட்டினம் (பிரதிப்பணிப்பாளர் வி.அ.அ. சபை), திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயராம், கல்வி அதிகாரி எஸ். நாகேந்திரம் உட்பட பல திணைக்கள தலைவர்கள் பிரதம அதிதிரியாக கலந்து கொண்டு பேசினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதேச பொறுப்பாளர் மணி கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். (37)

# இரு கிராமோதய சபைகள் கலந்து கொள்ளவில்லை

(வவுனியா)

அண்மையில் நடைபெற்ற கிராமோதய சபைகளுக்கான போட்டியில் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நெடுங்கேணி கிராமோதய சபையும், ஊஞ்சல் கட்டி கிராமோதயச் சபையும் கலந்து கொண்டன.

சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாமடு கிராமோதய சபை மட்டும் கலந்து கொண்டது.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், நெடுங்கேணி கிராமோதய சபை முதலிடம் பெற்றது. சிறந்த சேவை புரிந்த கிராமோதய சபையாக இது தெரிவு செய்யப்பட்டு, மாவட்ட ரீதியிலான போட்டிக்கு முடிவு அனுப்பப் பட்டுள்ளது.

மாவட்ட ரீதியிலான முடிவையடுத்து அகில இலங்கை ரீதியிலான போட்டி நடைபெற உள்ளது.

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவும், வவுனியா தெற்குத் தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவும், இப்போட்டிகளில் கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது. (தி)


## பதவி வெற்றிடம்

### விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் விவசாய செயற்திட்டங்களினை மேற்பார்வை செய்வதற்கு விவசாய மேற்பார்வை உத்தியோகத்தர்கள் தேவை. தகுந்த சம்பளமும் இதர படிகளும் வழங்கப்படும். தாவரவியல் விவசாயத்துறையில் தேர்ச்சி பெற்றோரிற்கு முன்னுரிமையளிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 06-06-1990. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழீழ ஆய்வு நிறுவனம் (ROOT)
207. இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி. (B/1037)



AIR CONDITION & REFRIGERATION
குளிரூட்டலும் பாதுகாத்தலும்
புதிய துரித பயிற்சி நெறி
ஆரம்பம்
2nd - June - 1990
செய்முறைப் பயிற்சியுடன் கூடியது
இலகு செய்முறை விளக்கம்
விபரங்கட்கு
North Ceylon Technical Institute
14 St. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
(R 1036)


## முதலுதவி பயிற்சி வகுப்பு

(சம்மாந்துறை)

காரைதீவு- களுவாஞ்சிக்குடி பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட சென். ஜோன் அம்புலன்ஸ் அஸோசியின் முதலுதவிப்படை' பயிற்சி வகுப்புகள் நடைபெற்று பரீட்சையும் நடாத்தப்பட்டது.

கிழக்கு மாகாண பணிப்பாளர் ஜனாப் ஏ. எல். அலியாரினால் பரீட்சை நடாத்தப்பட்டது.

## வருடாந்த மாநாடு

(பண்டத்தரிப்பு)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மகாநாடும் புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டமும் ஜூன் 8 ஆம் 9ஆம் திகதிகளில் நடாத்தப் படவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இவை நடைபெற ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

இன்றைய பொதுச் செயலாளர் திரு. த மகாசிவம் தலைமையிலான ஒரு குழு இதற்கான ஒழுங்குகளைச் செய்கின்றன.

## மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை

(அம்பாறை)

கல்முனை உத்தியோகத்தர்கள் களரியை மீண்டும் இயங்கவைக்க அதன் நிருவாகிகள் சிலர் முயற்சியெடுத்து வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இயங்கிய இக்களரி இந்திய இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தது.

இதனால் களரியின் கட்டிடப்பகுதியும் சேதமாக்கப் பட்டுள்ளது.

தற்போதுசூழ்நிலைநன்றாக இருப்பதைத் தொடர்ந்தே


வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
பயங்கரச் சண்டைகள் நிறைந்த படம்!!......
FISTFULL OF DOLLERS:
(Cinemascope)

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30., 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ், மனோரமா, ஜெய்சங்கர், வை. ஜி. மகேந்திரன் நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா



விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF
மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

வரையும் உள்ள பிரதான வீதியிலும மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பஸ்நிலைய மின்விளக்குகளும் இ ர வி ல் எரிகின்றன. (37)

ளின் 'காத்தவராயன்' நாடகமும் இடம் பெற்றன பருத்தித்துறை தபால் அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியமும் உரையாற்றினார். (25)


North Ceylon Technical Institute
14 St. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
(R 1036)



# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

**விவசாய இரசாயனங்கள்**

தற்போது வடபகுதியெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல், தண்டு வெளிறல் ஊதா கொப்புளநோய், தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

## பொலிராம் M பாவியுங்கள்.

தற்பொழுது வெங்காய செய்கையாளர்களால் விரும்பிப் பாவிக்கப்படும்

**ஓர் பூச்சிநாசினி**

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM AGRO DIVISION

**BASF** உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.**

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாக பாவியுங்கள்.) B-1019


(அம்பாறை)

கல்முனை உத்தியோகத்தர்கள் களரியை மீண்டும் இயங்கவைக்க அதன் நிருவாகிகள் சிலர் முயற்சியெடுத்து வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இயங்கிய இக்களரி இந்திய இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

இதனால் களரியின் கட்டிடப்பகுதியும் சேதமாக்கப்பட்டுள்ளது.

தற்போதுசூழ்நிலைநன்றாக இருப்பதைத் தொடர்ந்தே களரி மீண்டும் இயங்கவிருக்கின்றது. (48)

## இரு நேர பாடசாலைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலும் தற்போது இரு நேர பாடசாலைகள் மீண்டும் நடைபெறுகின்றன.

ஏற்கனவே இரு நேரப் பாடசாலைகள் நடைபெற்ற பாடசாலைகளில் மட்டும் நடைபெறுகின்றன. (37)

## கலைவிழாவும் விளையாட்டும்

(வவுனியா)

நொச்சிமோட்டை விவேகானந்தா சனசமுக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் விளையாட்டு நிகழ்ச்சியும், கலைவிழாவும் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை நொச்சிமோட்டை கழக மைதானத்தில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பல அரச அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

பகல் விசேட நிகழ்ச்சியாக நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் இரவு நாடகமும் நடைபெறும்.

(தி)

## சைக்கிள் பாதுகாப்புக்கு கொட்டகை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைதிருஞான சம்பந்த வித்தியாசாலை மாணவர் பாதுகாப்பாகதமது சைக்கில்களை நிறுத்துவதற்கு வட்டுக்கோட்டை இந்துவாலிர்கள் இருபதாயிரம் ரூபா செலவில் புதிய கொட்டகை அமைத்துக் கொடுத்துள்ளது. (12)


நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
சவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
**திருடி**
B 878

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7 00, 9·45
Terence Hill Bud Spence
**I AM FOR THE HIPPOPOTAMUS**

# A/L இரசாயனம்

## பரீட்சை மாதிரி வினாக்களும் விடைகளும்

## பொது இரசாயனம் - அசேதன இரசாயனம்

### அமைப்பு வடிவ வினாக்கள்

**சத்தீஸ்**

வினாக்களுக்கான விடைகளைப் பார்வையிட முன்னர் சுயமாக விடைகளை எழுதுதல் கூடிய பயன்தரும் உங்கள் ஆற்றலை சுயமாக மதிப்பிடக்கூடிய வகையில் விடைகளுடன் அவற்றுக்கான புள்ளிகளும் தரப்பட்டுள்ளன. 91-ம் ஆண்டு பரீட்சைக்குத் தோன்றும் A/L மாணவர்களின் பாடசாலைப் பாடத்திட்டத்துக்கமையவே வினாக்கள் தயாரிக்கப்படும். தொடக்கப்பகுதி பொது இரசாயனத்தையே கூடுதலாக உள்ளடக்கும். —ஆசிரியர்

### பரீட்சை மாதிரி வினாத்தாள் - 1

(ஒவ்வொரு வினாக்களுக்கும் மொத்தம் 100 புள்ளிகள்)

1. a (i) அணு எண் 33 ஐ உடைய ஆசனிக்கின் வலுவளவு ஒழுக்கு இலத்திரன் நிலையமைப்பினை பிரதான சக்திமட்டம், உபசக்திமட்டம் என்பவற்றைக் காட்டி எழுதுக. (10 புள்ளி)

(ii) அணு எண் 34 ஐக் கொண்ட செலனியத்தின் வலுவளவு ஒழுக்கு இலத்திரன் அமைப்பையும் மேல் வினாவில் கூறியது போல் எழுதி, செலனியத்தின் முதலாம் அயனாக்கற்சக்தியிலும் ஆசனிக்கின் முதலாம் அயனாக்கற்சக்தி ஏன் கூடியது என விளக்குக. (20 புள்ளி)

b. (i) உலர் $NH_3$ , $BCl_3$ உடன் தாக்கி உண்டாகும் கூட்டல் விளைவின் இலத்திரன் கட்டமைப்பை வரைக. (15 புள்ளி)

(ii) மேலே நீர் கூறிய சேர்வை நீரைத் தாக்கி உண்டாக்கும் விளைவுகள் யாவை? (15 புள்ளி)

c. மைய அணுவைச் சுற்றி உள்ள இலத்திரன் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு (i) $\overset{+}{CH_3}$ (ii) $\overset{-}{CH_3}$ அயன்களின் வடிவத்தை உய்த்தறிக. (20 புள்ளி)

d. (i) வித்தியாசமான மூலகங்களில் இருந்து பெறப்படும் கதோட்டுக்கதிர்த் துணிக்கைகள் எல்லாம் ஒரே தன்மையானவை என்பதற்கு பரிசோதனை ரீதியிலான ஆதாரம் தருக. (10 புள்ளி)

(ii) திரவ நீர் மூலக்கூறு முனைவாக்கம் உள்ளது என்பதை உமது பாடசாலை ஆய்வு கூடத்தில் எவ்வாறு செய்து காட்டுவீர். (10 புள்ளி)

2. அ. (a) ஒரு மூலகம் M இனது வாயு நிலையிலுள்ள ஐதரைட்டின் 1.240 கிராம் ஆனது அதன் மூலகங்களாக முற்றாக வெப்பக் கூட்டப் பிரிவுற்றபோது நி.வெ.அ. இல் 1345 $cm^3$ ஐதரசன் வாயுவைத் தந்தது. மேலுள்ள தரவிலிருந்து M இன் இரசாயனச் சமவலுவைக் கணிக்க. ( H = 1.00, நி.வெ.அ. இல் 1 மூல் $H_2$ இன் கனவளவு 22414 $cm^3$) (15 புள்ளி)

(b) ஐதரைட்டின் சார்பு மூலக்கூற்றுத் திணிவு 62 ஆகும். மேலே (a) இலுள்ள இரசாயனச் சமவலுவுக்கு இசைவான ஐதரைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம் என்ன? (10 புள்ளி)

(c) மேலேயுள்ள (b) இற்கான உமது விடையுடன் இணங்கும் M இன் வலுவளவு யாது? (10 புள்ளி)

(d) மேலே (a), (b), (c) ஆகியவற்றுக்குரிய உமது விடைகளுடன் இணங்கும் M இன் சார்பு அணுத்திணிவு என்ன? (10 புள்ளி)

(e) மிகவும் நம்பத்தக்க ஒரு முறையினால் M இன் சார்பு அணுத்திணிவு துணியப்பட்டுஅதன் செம்மையான பெறுமானம் 28 எனக் காணப்பட்டது M இன் ஐதரைட்டின் சரியான மூலக்கூற்றுச் சூத்திரம் என்ன? (15 புள்ளி)

(f) மிகவும் நம்பத்தக்க ஒரு முறையினால் M இன் இரசாயனச் சமவலு துணியப்பட்டு அதன் செம்மையான பெறுமானம் 7 எனக் காணப்பட்டது. M இன் ஐதரைட்டின் கட்டமைப்புச் சூத்திரத்தை வரைக. (10 புள்ளி)

ஆ. Cu செறிந்த $H_2SO_4$ ஐத் தாக்கி, $CuSO_4$, $SO_2$ என்பவற்றை விளைவாக்கும்.

# ...னித உரிமைகள் ஆணைக் குழு

# தேர்வில் இலங்கை இல்லை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த தவணை ஜனவரி1ஆம் திகதி 1991ல் ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆணைக் குழுவில் புதிய தவணைக்கு ஸ்ரீலங்கா மீளவும் தெரிவு செய்யப்படவில்லையாம்.

கடந்தபுதனன்றுநியூயோர்க்கில் நடந்த தேர்தலின் போது ஸ்ரீலங்கா தெரிவு செய்யப்படுவதற்கு தேவைப்படும் வாக்குகளை விடக் குறைவாக 14 வாக்குகளைத்தான் பெற முடிந்தது.

இத் தேர்தலில் போட்டிக்கு நின்ற ஆசியநாடுகள் மூன்றில் மிகக் குறைவான வாக்குகளைப்பெற்று ஸ்ரீலங்கா தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இந்த வருட இறுதியில் அங்கத்துவம் காலாவதியாகும் ஆசிய நாடுகளான சீனாவும், யப்பானும் முறையே 35, 39 வாக்குகளைப் பெற்று மீளவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவில் அங்கத்துவம் பெறுகின்றன. மற்றொரு ஆசியநாடானஇந்தோனேசியா 39 வாக்குகளைப் பெற்று ஸ்ரீலங்காவின் இடத்தைப் பிடித்துள்ளது.

இருஆசியநாடுகளானசிரியா 11 வாக்குகளையும், ஈராக் 9 வாக்குகளையும் பெற்றுத் தோல்வியடைந்தன.

கடந்த வருடம் பெப்ரவரியில் ஜெனிவாவில் நடந்த ஐ.நா.ம, உரிமைகள் ஆணைக் குழுக் கூட்டத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள்பற்றிவிவாதிக்கப்பட்டது.

பாராளுமன்ற எதிர்க்கட்சி மனிதஉரிமைகள் அமைப்பைச் சேர்ந்த இரத்தினபுரிமாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்காராவும், ஹம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியான மகிந்தா ராஜபக்ஸாவும்ஜெனிவாவுக்கு பயணம் ஒன்றைமேற்கொண்டு ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறல் பற்றி ஆணைக் குழு அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளார்கள். இதே வேளை மேற்படி ஆணைக்குழுவின் ஸ்ரீலங்காவின் பிரதிநிதியான சட்டத்தரணி சுனில் டி. சில்வா ஸ்ரீலங்காவில் ஜே.வி.பி யினர் மேற் கொண்ட அரசியல் கொலைகளால், அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததென்றும், இப்போது ஜே வி.பியின் அட்டகாசம் குறைந்திருப்பதால், ஸ்ரீலங்கா அரசு தணிந்து போவதாகவும் எடுத்துரைத்துள்ளார். ஆனால் இவரது விளக்கம் அங்கு எடுபடவில்லையாம்.

# பர்மாத் தேர்தலில் தேசிய ஜனநாயக லீக் வெற்றி?

(ரங்கூன்)

பர்மாவில் நடைபெற்ற தேர்தலில் பிரதான எதிர்க் கட்சியான தேசிய ஜனநாயக லீக் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

வாக்கெடுப்பு எண்ணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் தமது கட்சி வெற்றி பெறும் என்று அக்கட்சியின் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

தேசிய ஜனநாயக லீக் பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் தலைநகர் ரங்கூனில் உள்ள எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

இக்கட்சியின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவியும் தேசிய ஜனநாயக லீக்கின் தலைவியுமான அவ்சல் பொக்கியூ தேர்தலில் தனது தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். ஆனால் இவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏறக்குறைய முப்பது ஆண்டு காலம் நடைபெற்ற ஒரு கட்சி ஆட்சி முறையை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக இத் தேர்தல் அமையும் எனப் பலரும் கருதுகின்றனர்.

இத்தேர்தல் முடிவுகள் முழுதாக வெளிவர இரண்டு வார காலம் ஆகும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் இனக் கலகத்தில் இரு வாரத்தில் 89 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென்பகுதியில் கடந்த இரண்டு வார காலமாக நடைபெற்ற இனக் கலவரங்களில் குறைந்தது 89 பேர்வரை இறந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

ஹைதராபாத்திலும், கராச்சியிலும் கடந்த இரண்டு வாரங்களாக சுதேசி மக்களான சிந்திக் களுக்கும் குடிபெயர்ந்து சென்றுள்ள மொகாஜிர்களுக்கும் இடையே நிகழ்ந்திருக்கும் கலவரங்களில் பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதுவரை 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை டாக்டர்கள் அறிவித்துள்ளனர். இக் கலவரங்களில் ஈடுபட்டோர் என சந்தேகித்து 1000 பேர்வரை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் உயிர் இழப்புக்களானது கலகக்காரர்களுக்கும் ஹைதராபாத்தில் இராணுவத்தினர் கடந்த இரு வாரங்களாக கலகத்தை அடக்க முயன்று வருகின்றனர்.

ஆனால் மொகாஜிர் சமூகத்தவர்கள் தமது பள்ளிகளில் உள்ள ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு இராணுவத்தினரின் வருகையை ஒட்டி எச்சரிக்கை விடுகின்றனர்.

சீருடையிலும், சிவப்புத் தொப்பியிலும் கொள்ளையர்கள் உங்கள் பகுதிகளை தாக்கி வருகிறார்கள் என்று தெரிவித்தனர்.

சிந்து மாநிலத்தில் சிவப்புத் தொப்பி அணிந்த இராணுவத்தினர் கடந்த இரண்டு வாரங்களாக வன்முறைச் சந்தேக நபர்களை கண்டு பிடிக்கும் பணியில் இறங்கியுள்ளார்கள்.

மொகாஜிர் சமூகத்தவர்களுக்கும் சிந்து சமூகத்தவர்களுக்கும் இடையிலான மோதல்களை அடுத்தே ஆயுதப் முகம் கொடுக்க வேண்டிய அதே வேளையில் உள்நாட்டில் சிந்து மாகாணத்தில் கிளம்பியுள்ள பிரச்சினையும் பெனாஸிருக்கு ஒரு பெரும் பிரச்சினையாகவே இருக்கும்.

# நான் ஒரு கம்யூனிஸ்ட் ரஷ்யத்தலைவர்கொர்பசேவ்

(நியூயோர்க்)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்று தெட்டத் தெளிவாக பிரகடனம் செய்துள்ளதுடன் தனது கருத்துக்களை விளங்கி தனக்கு மதிப்பளிக்குமாறு கேட்டிருக்கின்றார்.

அமெரிக்க ரைம் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் தனது தத்துவார்த்த நம்பிக்கைகள் குறித்துகருத்து வெளியிட்டார். களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ் லெனின் போன்றவர்களின் கருத்துக்களை நியாயப் படுத்தியதுடன் நவீன உலகின் நாகரீகத்திற்கு அவர்கள் எண்ணற்ற பங்களிப்பினை செய்திருக்கிறார்கள் என்றும், அவர்களது கோட்பாடுகள் நடைமுறைக்கு உட்படுத்தப் பட்டபோது அவை திரிபு படுத்தப்பட்டதற்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர் என்றும் கூறினார்.

நி.வெ.அ. இல் 1345 $cm^3$ ஐதரசன் வாயுவைத் தந்தது. மேலுள்ள தரவிலிருந்து M இன் இரசாயனச் சமவலுவைக் கணிக்க. ( H = 1.00, நி.வெ.அ. இல் 1 மூல் $H_2$ இன் கனவளவு 22414 $cm^3$) (15 புள்ளி)

(b) ஐதரைட்டின் சார்பு மூலக்கூற்றுத் திணிவு 62 ஆகும். மேலே (a) இலுள்ள இரசாயனச் சமவலுவுக்கு இசைவான ஐதரைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம் என்ன? (10 புள்ளி)

(c) மேலேயுள்ள (b) இற்கான உமது விடையுடன் இணங்கும் M இன் வலுவளவு யாது? (10 புள்ளி)

(d) மேலே (a), (b), (c) ஆகியவற்றுக்குரிய உமது விடைகளுடன் இணங்கும் M இன் சார்பு அணுத்திணிவு என்ன? (10 புள்ளி)

(e) மிகவும் நம்பத்தக்க ஒரு முறையினால் M இன் சார்பு அணுத்திணிவு துணியப்பட்டுஅதன் செம்மையான பெறுமானம் 28 எனக் காணப்பட்டது M இன் ஐதரைட்டின் சரியான மூலக்கூற்றுச் சூத்திரம் என்ன? (15 புள்ளி)

(f) மிகவும் நம்பத்தக்க ஒரு முறையினால் M இன் இரசாயனச் சமவலு துணியப்பட்டு அதன் செம்மையான பெறுமானம் 7 எனக் காணப்பட்டது. M இன் ஐதரைட்டின் கட்டமைப்புச் சூத்திரத்தை வரைக. (10 புள்ளி)


ஆ. Cu செறிந்த $H_2SO_4$ ஐத் தாக்கி, $CuSO_4$, $SO_2$ என்பவற்றை விளைவாக்கும். இத்தாக்கத்தினை ஒட்சியேற்றல் எண் கொள்கையின் அடிப்படையிற் சமப்படுத்துக. (30 புள்ளி)

## பரீட்சை மாதிரி வினாத்தாள் 1 இன் விடைகள்

1. a. (i) $4S^24P^3$.

(ii) Se இன் வலுவளவு ஒழுக்கு இலத்திரன் அமைப்பு $4S^24P^4$. $S^2P^3$ எனும் அமைப்பில் P உப ஒழுக்கு அரை நிரம்பல் நிலையில் இருப்பதால் அதன் உறுதி $S^2P^4$ இலும் கூடியது. As இல் உறுதியான $S^2P^3$ என்னும் அரை நிரம்பல் அமைப்புக் காணப்படுவதாலும். As, Se, என்பவற்றில் வலுவளவொழுக்கு இலத்திரன்கள் ஒரே பிரதான சக்தி மட்டத்திற் காணப்படுவதாலும் As இல் இருந்து முதலாவது இலத்திரனை அகற்றுவது Se இலும் கடினமானது.

b. (i)




ii) $\overset{+}{NH_4}(aq)$, $\overset{-}{Cl}(aq)$, $H_3BO_3$ $H_3O^+$

c. (i) $\overset{+}{CH_3}$ இல் C – 4 இலத்திரன், 3H–ல் 3 இலத்திரன், ஒரு நேரேற்றம் இருப்பதால் ஒரு இலத்திரன் குறைக்கப்படும் ஆகவே மொத்த வலுவளவு இலத்திரன்களின் எண்ணிக்கை 6. மொத்த இலத்திரன் 6 / மைய அணுவைச் சுற்றி மூன்று சோடி இலத்திரன்கள் / மூன்றும் பிணைப்புச் சோடியாக இருக்கும். ஆகவே வடிவம் தள முக்கோணம்.

(ii) $\overset{-}{CH_3}$ இல் C - 4 இலத்திரன், 3H - 3 இலத்திரன். ஒரு எதிர் ஏற்றம் ஒரு இலத்திரன். ஆகவே மொத்த வலுவளவு இலத்திரன்களின் எண்ணிக்கை 8. மொத்த இலத்திரன் 8 / மைய அணுவைச் சுற்றி 4 சோடி இலத்திரன்கள் / மூன்று பிணைப்புச் சோடியும், ஒரு தனிச்சோடியும் உண்டு ஆகவே முக்கோணக் கூம்பு வடிவம்.



தளமுக்கோணம்



முக்கோணக் கூம்பு

d. (i) பரிசோதனையால் துணியப்படும் e/m, e,m என்பன பயன்படுத்தும் மூலகத்தில் தங்கியிராது (e - எதிர் ஏற்றப்பட்ட துணிக்கையின் ஏற்றம், m - எதிர் ஏற்றப்பட்ட துணிக்கையின் திணிவு).

(ii) அளவியல் நீரை எடுத்தல், அளவியைத் திறத்தல் பாயும் நீர் அருவிக்கு அருகே ஏற்றம் உள்ள ஒரு கோலை வைக்கும் போது. நீர் அருவி கோலின் பக்கமாகத் திரும்பல் அடையும்.

(தொடரும்)

ஹைதராபாத்திலும், கராச்சியிலும் கடந்த இரண்டு வாரங்களாக சுதேசி மக்களான சிந்திக் களுக்கும். குடிபெயர்ந்து சென்றுள்ள மொகாஜிர்களுக்கும் இடையே நிகழ்ந்திருக்கும் கலவரங்களில் பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதுவரை 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை டாக்டர்கள் அறிவித்துள்ளனர். இக் கலவரங்களில் ஈடுபட்டோர் என சந்தேகித்து 1000 பேர்வரை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் உயிர் இழப்புக்களானது கலகக்காரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினாலும், மொகாஜிர் சமூகத்தவர்களுக்கும் சிந்தி சமூகத்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற கைகலப்புகளினாலும் ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் சிந்து மாநிலத்தின் மிகப்பெரிய நகரமான களுக்கு இராணுவத்தினரின் வருகையை ஒட்டி எச்சரிக்கை விடுகின்றனர்.

சீருடையிலும், சிவப்புத் தொப்பியிலும் கொள்ளையர்கள் உங்கள் பகுதிகளை தாக்கி வருகிறார்கள் என்று தெரிவித்தனர்.

சிந்து மாநிலத்தில் சிவப்புத் தொப்பி அணிந்த இராணுவத்தினர் கடந்த இரண்டு வாரங்களாக வன்முறைச் சந்தேக நபர்களை கண்டு பிடிக்கும் பணியில் இறங்கியுள்ளார்கள்.

மொகாஜிர் சமூகத்தவர்களுக்கும் சிந்து சமூகத்தவர்களுக்கும் இடையிலான மோதல்களை அடுத்தே ஆயுதப் படையினர் தேடுதல்களை ஆரம்பித்தனர்.

சிந்து மாகாணத்தில் தொடர்ந்து இடம் பெற்று வரும் இனக்கலவரங்கள் பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோவுக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கும் பிரச்சினையாக இருக்கும் என அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

காஷ்மீர் பிரச்சினைக்கு

## பொலிஸ் நிலையத்தில் கணவன் சுட்டுக்கொலை இராணுவச்சிப்பாய் கைது

(மிறிஹானா)

மிறிஹானா பொலிஸ் நிலையத்துக்குப்புகார் செய்யச் சென்ற கணவனும் மனைவியும் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துகொண்டிருந்த சமயம் இராணுவச்சிப்பாய் ஒருவர் பொலிஸ்காரர் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்துக் கணவன் காசிம் என்பவரைச் சுட்டார். சாசிம் அந்த இடத்திலேயே மரணமானார். இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இராணுவச் சிப்பாய்க்கும் சாசியின் மனைவிக்கும் பாகிஸ்தானில் தொடபு ஏற்பட்டிருந்ததாகவும், மிறிஹானாவுக்கு காசிமும் மனைவியும் வந்திருந்த சமயம் இராணுவச் சிப்பாய் சென்று காசிம்மின் மனைவியைத் தம்முடன் வருமாறு அடிக்கடி தொல்லை கொடுத்ததாகவும் இது பற்றிப் புகார் செய்வதற்கு அவர்கள் பொலிஸ் நிலையம் சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

## ஜெர்மனிகள் இணைப்பு; அதிபர் புஷ் நம்பிக்கை

(வாஷங்டன்)

இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைவது குறித்த விடயங்களில் அமெரிக்க, சோவியத் தரப்புகளிடையே காணப்படும் வேற்றுமைகளை, இந்த வாரம் நடைபெற இருக்கும் உச்சி மகா நாட்டில் குறைத்துவிட தாம் விருப்பம் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

இந்த வார இறுதியில் நடைபெற இருக்கும் இரு ஜனாதிபதிகளின் சந்திப்பின் போது தொலை தூர ஏவுகணைகள் பற்றி பேசப்படும் அச் சந்திப்பில் ஜேர்மனி ஐக்கியம் பற்றியும் கதைக்க விருப்பம் இருப்பதாக ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சோவியத்திற்கு இடையே இணக்க நிலை காண்பதான முயற்சிக்கு ஒன்றிணைந்த ஜேர்மனி ஒரு முக்கிய இடைஞ்சலாகவே உருவெடுதிருப்பதாக ஜோஜ்புஷ் கூறியிருக்கிறார்.

## நான் ஒரு கம்யூனிஸ்ட் ரஷ்யத்தலைவர்கொர்பசேவ்

(நியூயோர்க்)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்று தெட்டத் தெளிவாக பிரகடனம் செய்துள்ளதுடன் தனது கருத்துக்களை விளங்கி தனக்கு மதிப்பளிக்குமாறு கேட்டிருக்கின்றார்.

அமெரிக்க ரைம் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் தனது தத்துவார்த்த நம்பிக்கைகள் குறித்துகருத்து வெளியிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்உடன் வாஷிங்டனில் அடுத்துவாரம் சந்திக்கவிருக்கும் கொர்பசேவ் இப் பேட்டியினை ''ரைம்'' சஞ்சிகைக்கு அளித்துள்ளார்.

கம்யூனிஸத்தின் ஸ்தாபகர்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ் லெனின் போன்றவர்களின் கருத்துக்களை நியாயப் படுத்தியதுடன் நவீன உலகின் நாகரீகத்திற்கு அவர்கள் எண்ணற்ற பங்களிப்பினை செய்திருக்கிறார்கள் என்றும், அவர்களது கோட்பாடுகள் நடைமுறைக்கு உட்படுத்தப் பட்டபோது அவை திரிபு படுத்தப்பட்டதற்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர் என்றும் கூறினார்.

கிழக்கைரோப்பாவில் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு வீழ்ச்சியைக் கொண்டு வந்த மாற்றங்களுக்கு காரணம் சுதந்திரம் இல்லாதநிலையை அங்கே மக்கள் நிராகரித்ததே என்றும் அவர் கூறினார்.

## ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் தனியாரால் திருத்தம்

(அம்பாறை)

பொத்துவில் அரசினர் ஆஸ்பத்திரியின் அம்புலன்ஸ் வண்டி பிரபல கொடைவள்ளல் அல்ஹாஜ் காசீம் மௌலவியால் திருத்தப்பட்டது.

இருபத்தையாயிரம் ரூபாவைஇதன்திருத்த வேலைகளுக்காக அவர் அன்பளிப்பாக வழங்கியதை யடுத்தே இந்த அம்புலன்ஸ்வண்டி திருத்தப்பட்டது.

இந்த அம்புலன்ஸ் வண்டி நீண்ட காலமாக பழுதடைந்து கிடந்தது. இதனால்நோயாளிகளை பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்ல முடியாதநிலை ஏற்பட்டிருந்தது பற்றிசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும்பாராளுமன்ற உறுப்பினர்ளுக்கும் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் இந்தக் கொடைவள்ளல் இவ்வாறு திருத்த உதவி செய்துள்ளார். இவர் பொத்துவில் சிற்றூர் கிளையின் தலைவருமாவார்.


## வாசக நேயர்களுக்கு

'ஈழநாதம்' வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டுமல்ல மாணவர்களுக்கும் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கும்பயனுள்ள,சுவையானபகுதிகளையும் தினமும் தருவது தெரிந்ததே. தினமும் வெளிவரும் விசேஷபகுதிகள்பற்றிய விபரம் இங்கேதரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| சனி | - | சத்தீஸ்மாஸ்ரரின் |
| ஞாயிறு | | A/L இரசாயனம் |
| திங்கள் | - | சமூகத்தைப்பாதிக்கும் பிரச்சினைகள் |
| செவ்வாய் | - | A/L இரசாயனம் வினாவிடைகள் |
| புதன் | - | விளையாட்டுப்பகுதி |
| வியாழன் | - | கதம்பமாலை |
| வெள்ளி | - | மஞ்சரி |

# இழந்த உரிமையைப் பெறலாம் நிலத்தை இழந்தால் எதுவுமில்லை

(யாழ்நகர்)

"நாம் இழந்த உரிமையை போராடிப்பெற முடியும் ஆனால் நிலத்தை இழந்த பின்னர் எதையும் பெற முடியாது"

இவ்வாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் அவர்கள் நேற்று மாலை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற ஆதம்பாவா நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக் கூட்டம் முஸ்லிம் வட்டாரம் வடக்கு சிற்றூர் அவைத் தலைவர் அனஸ் ஹமீம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் "இன்று நம் மத்தியில் முஸ்லிம் இனவாதம் பேசி தமிழ் தேசிய இனத்தை அழிக்க முயலும் சக்திகள் பற்றி நம் விழிப்புடன் இருக்க வேண்டும்; காலம் சென்ற ஆதம்பாவா முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தில் ஒரு படிக்கல். அவரது மறைவு தனிமனிதனின் மறைவு அல்ல. பெரும்பான்மை இனம் உரிமைகளை தானாகத் தராது நாம் போராடியே உரிமைகளைப் பெற வேண்டும் எனக் கூறினார்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் முன்னணியின் வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் அவர்கள் தமது உரையின்போது "எமது விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி அடைந்த நிலையில் இன்று உலகம் பாராட்டும் அளவிற்கு முன்னேறி வருகின்றது. காலம் சென்ற ஆதம்பாவா தமிழ் தேசிய இனத்தின் விடிவு வெள்ளியாக பிரகாசிக்கின்றார். இன்று தேசிய சக்திகள் எமது தேசபக்தர்களை அழித்து வருகின்றனர்கள் இதை நாம் அனுமதிக்கமுடியாது" என்றார்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் திரு. பீற்றர் மரியதாஸ், ஜனாப் எம். நூர்முகம்மது ஆகியோரும் உரையாற்றினர்.

முஸ்லிம் வட்டார வடக்கு சிற்றூர் அவைச் செயலாளர் ஜனாப் எஸ். ஏ. எஸ். ஹமீட் ஆசிரியர் நனறியுரை வழங்கினார். (52)

## மூதூர்

# பிரதான வீதி சீர்கேட்டால் பிரயாணிகள் அவதி

(மூதூர்)

மூதூர் இராசன் பிரதான வீதி மிகவும் சேழிந்து யாவரும் கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது இதன் காரணமாக இவ்வீதியில் செல்லும் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகினர்.

கடந்த வாரத்தில் பெய்த மழையினால் வீதி முற்றாக நீரினால் நிரம்பிய நிலையில் சேறும் சகதியுமாக காணப்பட்டது. இதன் காரணமாக இவ்வீதியால் பாடசாலை செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் அச்சகதியில் சிக்குண்டு தங்களது சீருடைகளுடன் நல்ல நிலையில் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருந்தனர்.

இதன் பின் 22.05.90 இல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால், இறாக் கூலி மூதூர் மக்களையும் அழைத்து சிரமதானத்தை மேற்கொண்டனர்.

இந்த சிரமதானத்தில் சகல ரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன. அவ்வீதி சுமார் மூன்று மைல் நீளமானதாகும். இவ்வீதியில எந்த வித குழப்பமின்றி மக்கள் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் கலந்து கொண்டு மிகவும் சிறப்பான முறையில் நல்லதொரு வீதியை உருவாக்கினார்கள்.

## மக்க[illegible] இரண்டுதி[illegible]கள்

(அம்பாறை)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தமது கல்முனைப் பிராந்திய காரியாலயத்தில் பொது மக்களின் பிரச்சினைகளை அணுகுவதற்காக ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளை ஒதுக்கியுள்ளார்.

இந்த இரண்டு தினங்களிலும் அவர் காரியாலயத்தில் இருப்பதென்றும், மற்றைய தினங்களில் வெளிவேலைக்குச் செல்வதெனவும் தெரிவித்தார். (48)



விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நூற்றிப்பத்துப்பேர் நேற்றுமுன்தினம் யாழ். பெருமாள்கோயில்முன்றலில் வைத்து விடுதலை செய்யப்பட்டபோது ஆஞ்சநேயர் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கும் பெற்றோருக்கும் அறிவுரை கூறியபொழுது எடுத்தபடம். ஆஞ்சநேயருக்கு அருகே பொன்மாஸ்ரர் நிற்கிறார்.

# சகல வித சூதாட்டங்களையும் பற்றி விசாரிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையில் குதிரைப் பந்தயத்துக்குக் காசுகட்டுவது முதல் சகலவிவமான சூதாட்டங்களைப்பற்றியும் ஆராந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவிசாரணைச்குழுஒன்றை இந்தவாரம் அரசாங்கம் அமைக்கவுள்ளதுவிசாரணைக் குழுவின் அறிக்கைக்கிணங்க சூதாட்டங்களைத் தடை செய்வதா இல்லையா என்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்யவுள்ளது.

சூதாட்டம் ஒரு சாபக்கேடாக மாறியுள்ளதாக பலர் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து விசாரணைக்குழு நிறுவப்படவுள்ளதாக பொது நிர்வாக மாகாண சபைகள் உள்துறை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கிடையில் அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளதென்றும் அறிக்கையின் பிரகாரம் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அமைச்சர் கூறினார்.

சூதாட்டம் தொடர்பான பிரமாணங்களின்படி இலங்கையில் பந்தயம் கட்டுதல், ஜக்பொட் போன்றவை தண்டனைக்குரிய குற்றங்கள்அல்ல அமைச்சர்பெஸ்டஸ் கருத்துத் தெரிவிக்கையில் விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் சூதாட்டம் தொடர்பான பிரமாணங்களில் திருத்தங்கள் செய்யப்படும் என்றார்.

கசினோ விளையாட்டுத் தொடர்பாக ஆராய மற்றுமொரு விசாரணைக்குழு நியமிக்கப் பட்டுள்ளது இவ் விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சூதாட்டம் தொடர்பான பிரமாணங்களில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகஅமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாட்டவர் கசினோ விளையாடலாமா இல்லையா என்பது பற்றியும் வெளிநாட்டுப் பணத்தை வைத்து விளையாடலாமா என்பது பற்றியும் விசாரணைக் குழு விசர்ரணையின் போது முக்கிய கவனமெடுக்குமாம்.

# மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதில் அசமந்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டில் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் மீன்பிடிப் படகுகள், உபகரணங்கள் விநியோக விவகாரத்தில் மீனவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது.

"மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளுங்கள். பங்குப் பணம்கட்டுங்கள். தோணிகள் பெற்றுத்தருவோம்" என ஆசை வார்த்தைகள் கூறப்பட்டதாம்.

பங்குப் பணம் செலுத்தி பலமாதங்களாகி விட்டன. ஆனால் பலன் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர். (37)

# பள்ளத்தில் பஸ்விழுந்து 20 பேர் காயம்

(ரத்தோட்டை)

ரத்தோட்டையில் பஸ்ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததில் இருபதுபேர் காயமடைந்தனர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாம்.

# 21 நாட்களுக்குள் எடுக்காவிடில் ஏலத்தில் விற்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட பொருட்கள் இருபத்தொரு நாட்களில் அப்புறப்படுத்தப்படாவிட்டால் அவை பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து இறக்குமதியாளர்களுக்கு துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் ரூபா கருனாதிலகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அதிகாரம் வழங்கியுள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தலில் ஒரு கோடி வாக்காளர்கள்

எதிர் வரும் உள்ளூராட்சிதேர்தல்களில் ஒரு கோடி பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆனையாளர் சந்திரானந்தா டீ. சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட தற்போது ஆறுலட்சம் வாக்குகள் அதிகரித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இந்த உள்ளூராட்சி தேர்தல்களுக்காம் ஆயத்தங்கள் தற்போது நடைபெற்று வருகிறது.

# உயிரிழந்த, ஊனமுற்றோருக்கு நஷ்டஈடுவழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் உயிர் இழந்த 80 குடும்பங்களுக்கும், ஊனமுற்ற 40 பேருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

மரணமான 80 பேரின் மரண[illegible] படுத்துவதற்காக அவை பதிவாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

அதேபோல ஊனமுற்றவர்களின் வைத்தியச் சான்றிதழ்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவை சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன அவை உண்மை என உறுதிப்

# வட-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்கு வழி?

## மற்றவர்களின் ஒத்துழைப்பு கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

காண்பது ஐக்கிய தேசியக்

# சேவைக்கால பயிற்சி வகுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆரம்ப வகுப்புகளில் "ஆரம்பக்கல்வியுடன் மனித மேம்பாடு கல்வி இணைந்து கற்பித்தல்" தொடர்பான சேவைக்கால

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 - 02 - 1970



தாயக மண்ணில் 29 - 05 - 1987

னர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாம்.

இருபத்தொரு நாட்களில் அப்புறப்படுத்தப்படாவிட்டால்

இது குறித்து இறக்குமதியாளர்களுக்கு துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் ரூபா கருனாதிலகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அதிகாரம் வழங்கியுள்ளார்.

எதிர் வரும் உள்ளூராட்சிதேர்தல்களில் ஒரு கோடி பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டீ. சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட தற்போது ஆறுலட்சம் வாக்குகள் அதிகரித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இந்த உள்ளூராட்சி தேர்தல்களுக்காம் ஆயத்தங்கள் தற்போது நடைபெற்று வருகிறது.

# உயிரிழந்த, ஊனமுற்றோருக்கு நஷ்டஈடுவழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் உயிர் இழந்த 80 குடும்பங்களுக்கும், ஊனமுற்ற 40 பேருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

மரணமான 80 பேரின் மரணச் சான்றிதழ்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவை பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோல ஊனமுற்றவர்களின் வைத்தியச் சான்றிதழ்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவை சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன அவை உண்மை என உறுதிப்படுத்தப்பட்டபின் கொடுப்பனவுகள் வழங்கப்படும். (49)

# வட-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்கு வழி?

## மற்றவர்களின் ஒத்துழைப்பு கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

''வடக்குக் கிழக்குமாகாண பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பது ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டும் நிறைவேற்றக் கூடிய காரியமில்லை இந்தப்பிரச்சினையில் ஒத்துழைப்புத்தர முன் வரும் எவருடனும் ஒத்துழைக்சத் தயாராக இருக்கிறோம்'' என்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுக் காலை பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்ந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சிங்களமும் தமிழும் இப்பொழுது அரசாங்கமொழிகளாக இருப்பதால் இவற்றைச் செயல்படுத்துவதில் அரசாங்க உத்தியோகத்தர்கள் கவனமாக இருக்க வேண்டுமென்றும் திரு. பிரேமதாஸா சொன்னார்.

சிங்களமும் தமிழும் சரியாக அமுல் நடத்தப்படவில்லையென்பதே இப்பொழுது அரசுக்கெதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு என்றும் இது விஷயத்தில் அரசாங்க உத்தியோகத்தர் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் ஜனாதிபதி கூறினார்.

# சேவைக்கால பயிற்சி வகுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆரம்ப வகுப்புகளில் ''ஆரம்பக்கல்வியுடன் மனித மேம்பாடு கல்வி இணைந்து கற்பித்தல்'' தொடர்பான சேவைக்கால பயிற்சி வகுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி அரசடி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

1ஆம் 2ஆம் 3ஆம் ஆண்டுகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம் தலைமை வகிப்பார். (37)

# நிதியுதவி கோரிக்கை

(திருக்கோணமலை)

1983 கலவரங்களினால் அழிந்து போன கவாட்டிக்குடா கிராமத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், சேதமான வீடுகளை புனர்நிர்மாணம் செய்யவும் கவாட்டிக்குடா மக்கள் நல்வாழ்வு மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்மன்றத்தின் தலைவர் திரு. டீ.ஜே. எம்.ஜேசுராஜன் இதற்கான நிதி மற்றும் பொருள் உதவிகளை அளிக்குமாறு பொது ஸ்தாபனங்கள், சமூக அமைப்புக்கள், பொதுமக்களிடம் வேண்டியுள்ளார்.

# கடற்றொழில் அபிவிருத்தி பிரச்சினைபற்றி ஆலோசனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வது, மீனவர்களின் பிரச்சினைகள் என்பன பற்றி ஆலோசனைக்கூட்டம் அரசாங்க அதிபர் தலைமையில் முல்லைத்தீவுக் கச்சேரியில் நடைபெற்றது.

கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர், திட்ட அமுலாக்கல் அதிகாரி மற்றும் ஜனசக்தி உதவிக்குழுக்களும் இதில் கலந்து கொண்டனர். ஜனசக்தி உதவி பெறுபவர்களின் நன்மைகள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

கடற்றொழிலாளர் சிறுகைத்தொழில் அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராயப்பட்டபோது ஐஸ் கட்டித் தொழிற்சாலை அமைப்பதன் அவசியத்தை பலரும் வலியுறுத்தினார்கள்.

அத்துடன் கருவாடு போடுவதற்கு அரைக்கப்பட்ட உப்பு வழங்கப்படவேண்டும் எனவும் கேட்கப்பட்டது.

இரண்டு வாரங்களில் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

TRAINING FOR NURSES - AIDE (MALE)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி
10-06-1990 இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கு

Dr. V. P. சுந்தரராஜன்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


(B.961)



கம்பியூட்டர் கல்வி

- BASIC LANGUAGE
  ஆரம்பம்: 30 - May - 90 (திங்கள், புதன், வெள்ளி 1-15 p.m.)
- LOTUS 1-2-3
  ஆரம்பம்: 7 - June - 90 9-00 a. m.
- d BASE III PLUS
  ஆரம்பம்: 7 - June - 90 (செவ்வாய், வியாழன்) 10-30 a. m.)

Join with us to Study the Latest Computer Technology





Unikco Computer Centre

No. 5. Power House Road, 2nd Lane,
JAFFNA.

(B-971)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 - 02 - 1970



தாயக மண்ணில் 29 - 05 - 1987

**செல்வன் நாகராசர் சிதம்பரநடராஜன்**
(பாபு)

ஓடி மறைந்தது மூன்றாண்டு மகனே
தேடி அலைகிறோம் தினமும் உன் ஆவியை
மறக்க முடியாத உன் நினைவலைகள்
மறக்க முயன்றாலும் முடியவில்லை
வீரவேங்கையென வீறுநடை போட்டாய்
வீழ்ந்திட்டாய் விடுதலைக்காய்
உன் நாமம் என்றும் வாழும்.


குடும்பத்தினர்.
உற்றார், உறவினர், நண்பர்கள்

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(R-308)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 — 04 — 73



வீரமரணம் 26 — 04 — 90

## வீரவேங்கை குணாஸ்

அந்நியனை எமது மண்ணில் ஓர் அங்குலம்கூட ஆழவிடோம் என எண்ணி வீரமரணமடைந்த போராளிகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்ட வீர வேங்கை குணாஸ்.

பெற்றோரும், இரண்டாம் கட்டை மக்களும், சகபோராளிகளும்.

முரசுமோட்டை.

(R/ 309)

### சிந்தனைக்கு

அறம் வேறு அரசியல் வேறு என்று கருதுபவர்கள் இரண்டையுமே என்றும் விளங்கிக்கொள்ள இயலாது.

- ஜான்மார்லி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 29 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05

## அநுராவின் நிபந்தனைகள் - 2 - 3

★ ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்.

★ தமிழர்கள் அல்லாத மற்றைய இனத்தவர்களும் வடக்கு கிழக்கில் வாழ அனுமதிக்க வேண்டும்.

★ ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மூன்றுநிபந்தனைகளையும் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டால் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதுபற்றித் தாங்கள் பரிசீலனை செய்யலாம் என்று இரு பிரதமர்களின் மகன் என்ற பெருமை பெற்ற அநுரா பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார்.

ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கீழே வைக்க வேண்டுமென்ற பேச்சுக்கே இடமில்லையென்பதை நேற்றைய நமது தலையங்கத்தில் விளக்கமாகத் தெரிவித்திருந்தோம். இதற்கு முன்னரும் நாம் இதைத் தெளிவாக்கியிருந்தோம். நமக்கென்றொரு படை தேவையென்றுகூட நாம் எமது பாதுகாப்புப்பற்றிச் சொல்லியிருந்தோம்.

இனி அநுராவின் இரண்டு நிபந்தனைகளையும் சிறிது ஆராயலாம்.

தமிழர்கள் அல்லாத மற்றைய இனத்தவர்கள் வடக்கு கிழக்கில் வாழாமலிருந்ததில்லை. அநுராவின் தகப்பன் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் சகல பாடசாலைகளிலும் சிங்கள ஆசிரியர்களும் பௌத்த பிக்குகளும் சிங்களத்தையும் ஒரு பாடமாகப் போதித்து வந்தனர். சகோதரர்போல் வாழ்ந்து வந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருக்கோணமலையிலும் இங்கினியாகல அம்பாறையிலும் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழ் மண்ணை அபகரிக்க எடுத்த முயற்சிகளும் அதைத் தொடர்ந்து இன்றுவரை தீவிரமாகச் செயல்படுத்தி வருவதுமே இன்றுள்ள பிரச்சினை.

சிங்களம் மட்டும் மசோதாவுடன் தமிழர்களுக்கு எதிரான இனக்கலகமும் தூண்டிவிடப்பட்டதும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்க எடுத்த முயற்சிகளும் இதற்கு திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் உடந்தையாக இருப்பதுமே சிங்களவர்கள் தமிழர்களுடன் சேர்ந்து வாழ முடியாமலிருப்பதற்கு காரணம்.

பரம்பரை பரம்பரையாக மலையகத்தில் வாழ்ந்துவரும் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களில் ஒரு லட்சம் பேரையும் அவர்களது பிள்ளைகளையும் நாடு

# விடுதலைப் புலிகளும் முஸ்லிம் மக்களும்

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தனிச் சிறப்புடைய மத, கலாசாரப் பண்புகளைக் கொண்ட ஒரு இனக்குழு என்பதையும், தமிழ் தேசிய அமைப்பில் அவர்கள் இணைபிரியாத அங்கமாக அமையப் பெற்றுள்ளனர் என்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அங்கீகரிக்கின்றது. தமிழரின் பாரம்பரிய பூமியாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழீழம் முஸ்லிம் மக்களின் தாயகம் என்பதையும் எமது இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் திட்டம் பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்வரசியல் திட்டத்தில் மேலும் எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்து தமிழீழத் தனியரசை அமைப்பது தான் தமிழ்-முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையுமென எமது விடுதலை இயக்கம் உறுதியாக நம்புகிறது. அமையவிருக்கும் சுதந்திரத் தமிழீழத்தில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கும் உரிமைகளுக்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் நாம் உத்தரவாதம் அளிப்பதோடு, முஸ்லிம் மக்களின் மத, கலாசாரத் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்படுமெனவும் உறுதியளிக்கின்றோம். என முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கடந்த காலங்களிலும் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காகச் செயற்பட்டுள்ளனர். முஸ்லிம் மக்களிற்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் பல நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் எடுத்துள்ளனர். தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக விடுதலைப்புலிகள் எடுத்த நடவடிக்கைகளிற் சில:-

1) 1985ஆம் ஆண்டு தமிழ் முஸ்லிம் கலவரத்தினை நிறுத்தச் செயற்பட்டதுடன் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளிலீடுபட்டவர்களின் மீது நடவடிக்கையும் எடுத்தமை.

2) இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனைப்படி தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினைச் சிதைக்க ஸ்ரீலங்கா அரசால் உருவாக்கப்பட்ட 'ஜிகாத்' அமைப்பினை அம்பலப்படுத்தியமை

3) தமிழ் பேசும் மக்களில் முஸ்லிம் மக்கள் சிறுபான்மையினர் என்ற வகையில், அவர்களுக்கு ஏற்படக் கூடிய பெரும்பான்மை இன ஆதிக்கம் குறித்த அச்சத்தினைப் போக்கக் கூடியவகையில் பல உத்தரவாதங்கள் வழங்கியுள்ளமை.

4) தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக உழைக்கும் முஸ்லிம் மக்களுடன் நல்லுறவினை ஏற்படுத்திவருவதுடன் அவர்களது பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகின்றமை.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்த, முஸ்லிம் மக்களும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ளத் தொடங்கினர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழ்-முஸ்லிம் மக்களுக்கான இணைப்புப்பாலமாக அமைந்து விடுவதற்கான நிலைமைகள் தோற்றம் பெற்று வருதைனைக் கண்ட சில சக்திகள் இதனை முறியடிப்பதற்கான சதி நடவடிக்கைகளில் ஈடுபடலாயின கடந்த ஜனவரி மாதத்தில் விடுதலைப்புலிகளின் இரு ஆதரவாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் பின்வரும் ஜனவரி 30ஆம் திகதி ரசூல் என்னும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவங்களின் பின்னணியிலுள்ளஆயுதம் தாங்கிய குழுவினர் இஸ்ரேலிய மொஸாட்டின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்ட 'ஜிகாத்' அமைப்பினர் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினருக்கும் இச்சம்பவங்களுக்கும் தொடர்புண்டு எனவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன,

தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக உழைக்கும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்படும்போது அதனை எதிர்கொண்டு அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. இதனால் ஆயுதம் தாங்கி இயங்கி தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினைச் சீர்குலைக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தவும் இச் சக்திகளின் ஆயுதங்களைக் களைவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுப்பது தவிர்க்க முடியாத அவசியமாக உணரப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்படுபவர்கள் என்று கருதப்படுபவர்களைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்த வேண்டிய கட்டாயம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சில ஆவணங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் இந்திய உளவுத் துறையான ''றோ'' வினால் வழங்கப்பட்டவை என விசாரணையின்போது தெரிய வந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிப்பாதையில் முன்னேறாமல் தடுப்பதற்கு 'றோ' செய்து வரும் நாசவேலைகளில் ஒன்றே இந்த ஆயுத விநியோகம் என்று கருதப்படுகின்றது.

விடுதலைப்புலிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்கள் பின்னர் பள்ளிவாசலூடாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தினைப் பெரிதுபடுத்தி பிரச்சாரம் செய்வதன் மூலமும் தமது அரசியல் நலன்களைப் பேணிக் கொள்வதற்கும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயன்றது. எனினும் இந்நடவடிக்கையினை எடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது குறித்து விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக விளக்கமளித்து வருகின்றமை முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரத்தை முறியடித்து வருகின்றது.

ஸ்ரீலங்கா அரசும், இந்திய அரசும் தமிழ் பேசும் மக்களைப் பிரித்தாளுவதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முறியடிப்பதற்கான சதிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் இத்தகைய சதிகளை வெற்றிகொண்டு, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து விடுதலைப் போரினை முன்னெடுக்க வேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டத்தில் இன்று நாம் உள்ளோம். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழ்-முஸ்லிம் மக்களுக்குரிய பொது அமைப்பாகப் பரிணமித்து வளர்ந்து வருவது எதிர்காலம் குறித்த நம்பிக்கையினை அளிக்கின்றது.

(முற்றும்)

- நன்றி 'சுதந்திரதாகம்'

## நெற்பயிர்களை எலிகள் இரவில் அழித்து வருகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சிறுபோக நெற்பயிர்களை எலிகள் இரவு நேரம் சேதப்படுத்தி வருவதாக இரணைமடு திட்ட ஊழியரின் உபகுழு கவலை தெரிவித்துள்ளது.

விதைத்து பயிர் வருவதை விவசாயிகள் அவதானித்து வந்த போது முளைத்த நெற்பயிர்களை இந்த எலிகள் இரவு நேரம் உண்டு வருவது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனால் பல வயல்களில் நெல் விதைக்கப்பட்டும் அவை வெறும் வயல்களாக காட்சி அளிக்கின்றன.

இந்த எலிகளின் அட்டகாசத்தைப் போக்க மொனோகுறோட்ட பொஸ் என்ற மருந்தை அரிசி அல்லது நெல்லுடன் கலந்து வயல் வரம்புகளில் வைத்து எலிகளைக் கொல்லலாம்.

அத்துடன் வயல் வரம்புகளில் உள்ள புதர்களுக்கு அருகிலும் இந்த மருந்து கலந்த உணவை வைத்தால் எலிகள் சாப்பிட்டு இறந்து விடும்.

வயல் கரையில் உள்ள புற்றுபுல், பூண்டு, ஆகியவற்றை துப்பரவு செய்தும் எலிகளை அழிக்கலாம். இவ்வாறு இம்மன்ற உபகுழு தெரிவித்துள்ளது.

## கிராமிய விளையாட்டுக்களை நாம் வளர்க்க வேண்டும்

(அம்பாறை)

''நமது கிராமிய பாரம்பரிய விளையாட்டுக்களையும் நாம் விளையாடி, அவைகளை மக்கள் முன் புத்துயிர் பெறச் செய்ய வேண்மெ்.''

கோமாரிக் கிராமத்தில் உள்ள மக்கள் முன்னணிசிற்றூர்கிளையினரும் மக்கள்முன்னணியினரும்சேர்ந்துநடத்திய பாரம்பரியகிராமிய விளையாட்டுக்களை உள்ளடக்கிய விளையாட்டு போட்டியின்பரிசளிப்புவைபவத்தின் போது உரையாற்றிய புலிகள் மக்கள் முன்னணிஅம்பாறைமாவட்ட பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-கடந்த ஆறுவருடங்களுக்குப் பின்னர் நமது கிராமங்கள் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துகின்றன. இவ்வாறான போட்டிகளில் நமது பாரம்பரியமான பழம் பெருமைமிக்க கிராமிய விளையாட்டுக்களை நாம்

இவைகளிலிருந்து ஒதுங்கியுள்ளவர்களும் தவறாது முன்வந்து தங்களின்பங்களிப்பைச் செய்யவேண்டும் என்றும் கூறினார்.

திரு. சாமுவேல் நவயோகானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கொடைவள்ளல் அல்ஹாஜ் காசீம் மௌலவி, உதவி அரச அதிபர் திரு. சச்சிதானந்தம், திரு. பி. ஜெயந்திரன் ஆகியோருடன் மற்றும் பலரும் உரையாற்றினர். (48)

## வண்ணன் நினைவு தூபி

(முல்லைத்தீவு)

மாங்குளம் துணுக்காய்ச் சந்தியில் மறைந்த போராளி வீரவேங்கை வண்ணன் நினைவுதூபி நிறுவப்பட்டுள்ளது அன்னாரின் ஓராண்டு நினைவு தினத்தன்று

## வேலையில்லாப் பிரச்சினை தீர்வதற்கு சனசமூகநிலையங்கள்செயற்பட வேண்டும்

(பருத்தித்துறை)

''சனசமூக நிலையங்கள் கிராமியப் பகுதிகளின் அபிவிருத்தி அலகுகளாகச் செயற்

சிறப்பாக இயங்கி இன்று வெள்ளி விழாவையும் மலர் வெளியீட்டையும் நடாத்துவது மக மகிழ்ச்சிக் குரியதா

நிலைய மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு நிலையத்தலைவர் திரு. கே. நடராஜா தலைமை தாங்கி

பௌத்த பிக்குகளும் சிங்களத்தையும் ஒரு பாடமாகப் போதித்து வந்தனர். சகோதரர்போல் வாழ்ந்து வந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருக்கோணமலையிலும் இங்கினியாகல அம்பாறையிலும் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழ் மண்ணை அபகரிக்க எடுத்த முயற்சிகளும் அதைத் தொடர்ந்து இன்றுவரை தீவிரமாகச் செயல்படுத்தி வருவதுமே இன்றுள்ள பிரச்சினை.

சிங்களம் மட்டும் மசோதாவுடன் தமிழர்களுக்கு எதிரான இனக்கலகமும் தூண்டிவிடப்பட்டதும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்க எடுத்த முயற்சிகளும் இதற்கு திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் உடந்தையாக இருப்பதுமே சிங்களவர்கள் தமிழர்களுடன் சேர்ந்து வாழ முடியாமலிருப்பதற்கு காரணம்.

பரம்பரை பரம்பரையாக மலையகத்தில் வாழ்ந்துவரும் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களில் ஒரு லட்சம் பேரையும் அவர்களது பிள்ளைகளையும் நாடு கடத்த வேண்டுமென்று காலாவதியாகிவிட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தைக் காட்டி அரசு முரண்டு பண்ணும்போது தமிழ் மண்ணை அபகரிப்பதற்காகத் திட்டமிட்டு 1950 ஆம் ஆண்டுக்குப்பின் குடியேற்றியவர்களை வெளியேற்ற வேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு?

1951 ஆம் ஆண்டில் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையாகவும் முஸ்லிம்கள் இரண்டாம் பெரும்பான்மையாகவும் வாழ்ந்த திருக்கோணமலையில் இன்று சிங்களவர்களே மிகப் பெரும்பான்மையினராக வாழ முடிந்தது எப்படி?

திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழ் பேசும் மக்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டு சிங்களவர்கள் அவர்கள் நிலத்தை அபகரிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா?

இன்றைய இனப்பிரச்சினையில் அடிப்படையே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்பதை அநுரா ஏன் புரிந்துகொள்ளவில்லை?

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் தமிழராகச் சகோதரர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இடையிடையே சில தீய சக்திகளின் தூண்டுதலால் இரு பிரிவினருக்கிடையிலும் சண்டையேற்பட்டாலும் சகோதரர் என்பதைஉணர்ந்து இன்றும் சகோதரர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அநுராவின் இரண்டாவது நிபந்தனை அர்த்தமற்றதென்பது தெளிவு.

ஒற்றையாட்சி அமைப்பைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது மூன்றாவது அநுராகம்!

ஒற்றையாட்சி அமைப்பை பாதுகாப்பதற்குத்தான் பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. அநுராவின் அப்பா செய்த ஒப்பந்தத்தைக்கூட அநுராவின் அம்மாவால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது இனி அநுராவா காப்பாற்றப்போகிறார்.

ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் சிங்கள அரசியல்வாதிகளின் கைகளில்தான் இருக்கிறது.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்காவிட்டால் அதுவே ஒற்றையாட்சிக்கு ஆபத்தாகவும் முடியலாம்!

பல உயிர்களைப் பலி கொடுத்து பயாப்ரா தோல்வியடைந்ததும் பல உயிர்களைப் பலி கொடுத்து பங்களாதேஷ் உருவானது. ஆனால் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் மலேசியாவும் சிங்கப்பூரும் சந்தோஷமாகத் தங்கள் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

அநுரா சிந்திக்கட்டும்!

---

படுத்துவதற்காகவும் பல நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் எடுத்துள்ளனர். தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக விடுதலைப்புலிகள் எடுத்த நடவடிக்கைகளிற் சில:-

1) 1985ஆம் ஆண்டு தமிழ் முஸ்லிம் கலவரத்தினை நிறுத்தச் செயற்பட்டதுடன் முஸ்

...ளின் பின்னணியிலுள்ள ஆயுதம் தாங்கிய குழுவினர் இஸ்ரேலிய மொஸாட்டின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்ட 'ஜிகாத்' அமைப்பினர் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினருக்கும் இச்சம்பவங்களுக்கும் தொடர்புண்டு எனவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன,

...பேணிக் கொள்வதற்கும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயன்றது. எனினும் இந்நடவடிக்கையினை எடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது குறித்து விடுதலைப் புலிகள் தொடர்ச்சி

---

...றார்கிளையினரும் மக்கள்முன்னணியினரும்சேர்ந்துநடத்திய பாரம்பரியகிராமிய விளையாட்டுக்களை உள்ளடக்கிய விளையாட்டு போட்டியின்பரிசளிப்புவைபவத்தின் போது உரையாற்றிய புலிகள் மக்கள் முன்னணிஅம்பாறைமாவட்ட பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-கடந்த ஆறுவருடங்களுக்குப் பின்னர் நமது கிராமங்கள் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துகின்றன. இவ்வாறான போட்டிகளில் நமது பாரம்பரியமான பழம் பெருமைமிக்க கிராமிய விளையாட்டுக்களை நாம் வளர்க்க வேண்டும்.

...பெற்ற இவ்விழாவில் கொடை வள்ளல் அல்ஹாஜ் காசீம் மௌலவி, உதவி அரச அதிபர் திரு. சச்சிதானந்தம், திரு. பி. ஜெயந்திரன் ஆகியோருடன் மற்றும் பலரும் உரையாற்றினர். (48)

---

# வேலையில்லாப் பிரச்சினை தீர்வதற்கு சனசமூகநிலையங்கள்செயற்பட வேண்டும்

(பருத்தித்துறை)

''சனசமூக நிலையங்கள் கிராமியப் பகுதிகளின் அபிவிருத்தி அலகுகளாகச் செயற்பட வேண்டும். அப்போது தான் கிராமிய எழுச்சியையும், சமுதாய விழிப்புணர்ச்சியையும் கிராமங்களில் ஏற்படுத்த முடியும். இதனைக் கருத்திற் கொண்டே சனசமூ நிலையங்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையான உதவிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

அல்வாய் தெற்கு பாரதி தாசன் சனசமூக நிலையம் சிறப்பாக இயங்கி இன்று வெள்ளி விழாவையும் மலர் வெளியீட்டையும் நடாத்துவது மக மகிழ்ச்சிக் குரியதாகும்.''

இவ்வாறு, யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ்.டிவகலாலாஅல்வாய் தெற்கு பாரதிதாசன்சனசமூக நிலைய வெள்ளி விழாவிலும் மலர் வெளியீட்டிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நிலைய மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு நிலையத்தலைவர் திரு. கே. நடராஜா தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய உளூராட்சி உதவி ஆணையாளர். திரு. டிவகலாலா குறிப்பிட்டதாவது''

சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலைகளாக மட்டும் இயங்குவதால் அதனால் முழுமையான பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. கிராமிய கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார கல்வி, விளையாட்டுத் துறைகளின் அபிவிருத்தி மேம்பாடுகளுக்கான நடவடிக்கைகளைச் சனசமூக நிலையங் மேற்கொள்ள வேண்டும்.

கிராமப் பகுதியின் மூலவளங்கள் பற்றி ஆராய்ந்து இம் மூலவளங்களை முழுமையாகப் பயன் படுத்திஉ ற்பத்திகளைப் பெருக்குவதும். கிராமிய இளைஞர் யுவதிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதும் சனசமூக நிலையங்களின் முக்கிய பணியாகும்.

கிராமிய ஒற்றுமைகளைப் பேணல், முதியோர் கல்வி போன்றவற்றில் சனசமூக நிலையங்கள் கவனமெடுக்க வேண்டும். கிராமங்களினதும், மக்களினதும் தேவைகளை ஆராய்ந்து அறிந்துஅத்தேவைகளை முன்னுரிமைப் படுத்தி அவற்றினை நடைமுறைப் படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்திற்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு 235 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்றார்.

வட மராட்சி தெற்குமேற்கு உதவி அரசாங்க அதிபர். திரு. ஈ ஐயாத்துரை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

அல்வாய் தெற்கு பாரதி தாஸன் சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கி ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வது வரவேற்கப் பட வேண்டியதாகும் என்றார்.

---

## மீளக்குடியமர்வு நிவாரணப் படி உரியகாலத்தில்வழங்கப்படாதது ஏன்?

ஆசிரியர்,
ஈழநாதம்.

மீளக்குடியமர்தல் நிவாரணப் படிக் கொடுப்பனவு பெரும்பாலும் சகல பகுதிகளிலும் கொடுத்தாயிற்று. மணியம் தோட்டத்தில் வசிக்கும் சில குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களில் நானும் ஒருவன். எனது விண்ணப்பப்படிவங்கள் அப்பகுதி கிராமசேவக நிலதாரியிடம் அப்படிவங்கள் எனக்கு வழங்கப்பட்ட தினத்திற்கு மறுநாளே நேரடியாக ஒப்படைக்கப்பட்டன. ஆனால் எனக்கு இன்றுவரை இந் நிவாரணம்

### மக்கள் மடல்

வழங்கப்படவில்லை.மற்றைய குடும்பங்களின் பெயர்கள் ட்டியலில் வெளியாகியபோது அதில் எனதும், எனது தாயாரினதும் பெயர்கள் இல்லாமை கண்டு உடனடியாக எதுவித தாமதமுமின்றி எமது பகுதி கிராமசேவகரிடம் விசாரித்தேன். அதற்கு அவர், தான் ஆகவேண்டிய யாவற்றையும் செய்துமுடித்து ஒப்படைத்ததாகவும், அதற்குப்பின் நடந்தவை தனக்குத்தெரியாதென்றும் மேல் விபரங்களை உதவி அரசாங்க அதிபரிடம் விசாரிக்கும் படியும் கூறினார். நான் உதவி அரசாங்க அதிபருக்கு மனுச்செய்து நேரில் சமர்ப்பித்தேன். அங்கு அவர்கள் விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து பார்த்தபோது எமது விண்ணப்பப்படிவங்கள் அவற்றில் இருக்கவில்லை. இதை நான் மீண்டும் கிராமசேவகருக்கு அறிவித்தேன். எதுவித காரணமும் அவரால் கூற முடியவில்லை பின்பு அனேக மாதங்களின் பின் அவர் எனக்குச் செய்தி அனுப்பினார். நான் அவரைச்சந்தித்தபோது விண்ணப்பப்படிவங்கள் அவரிடம் இருந்தன. ஆவனசெய்து இந் நிவாரணம் எமக்குக் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். ஆனால் இன்றுவரை எதுவித தகவலுமில்லை. பலதடவைகள் விசாரித்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இவ் விதம் எத்தனை எத்தனை அநாதரவான குடும்பங்கள் இருக்கின்றனவோ யார் அறிவார்? உரிய காலத்தில் விண்ணப்பங்கள் கிடைக்கப்படவில்லை. அதனால்தான் இந் நிவாரணம் ஏற்கனவே கொடுபடவில்லை என்னும் காரணம் எனது விடயத்தில் முற்றும் பொருந்தாது. இனிமேல் ஆவது இந்நிவாரணம் கூடிய விரைவில் கிடைக்கும் வண்ணம் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

பீ. எம். இம்மானுவேல்
யாழ்ப்பாணம்.

---

## வண்ணன் நினைவு தூபி

(முல்லைத்தீவு)

மாங்குளம் துணுக்காய்ச் சந்தியில் மறைந்த போராளி வீரவேங்கை வண்ணன் நினைவுதூபி நிறுவப்பட்டுள்ளது அன்னாரின் ஓராண்டு நினைவு தினத்தன்று இத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

---

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

அகழியினது முழு வேலைகளும் முடிவடைந்த பின்னர் வெளியிலிருந்து பார்க்கும் பொழுது அங்கு இருப்பது முற்றிலும் தெரியாதவாறு அமைந்திருப்பின் அது மிகச் சிறப்பானதாகும். மேற் கூறியவாறு அகழியொன்றினை அமைப்பதற்கு மரக்கட்டைகளோ, கற்களோ கிடைக்காவிடின் கூட வெறுமனே மண் அல்லது மணலினால்கூட கூரை அமைக்கப் படலாம். சாதாரண இறுக்கமான மண்ணைப் பயன்படுத்துவீர்களேயாயின் குறைந்தது 5அடி உயரமுடையதாகவும், நன்கு காய்ந்து இறுக்கமற்ற கடற்கரை மணலாயின் குறைந்தது 4அடி உயரமாவது இருக்க வேண்டும். மண் நிரம்பிய சாக்கு மூட்டைகளாயின் குறைந்தது 5அடி உயரமுடையதாகவும், மணல் நிரம்பிய சாக்குமூட்டைகளாயின் குறைந்தது மூன்றரை அடி உயரமானதாகவும், கூழாங்கற்கள் போன்ற 1அங்குலத்திலும் குறைவான அளவுடைய சிறு கற்களால் நிரப்பப்பட்ட சாக்கு மூட்டைகளாயின் குறைந்தது இரண்டரை அடி உயரமானதாகவும் இருக்கக்கூடியவாறு நெருக்கி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட வேண்டும்.

இதுவரை குண்டு வீச்சு ஒன்று நிகழும் போதும், அதற்கு முன்பும் எவ்வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கண்டீர்கள். இனி மீண்டும் மீண்டும் ஓரே பிரதேசம் ஒன்றில் குண்டு வீசப்படும் போது உங்களால் செய்யப்படும் ஒரு சில நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம். இவற்றின் மூலம் நீங்கள் குண்டு வீசும் விமான ஓட்டியை ஏமாற்றி, திசை திருப்பக் கூடியதாய் இருக்கலாம். அதாவது, முக்கியமாக இரவில் குண்டு வீச்சு நிகழ்கின்றதாயின், உங்களது வீட்டிலுள்ள சகல விளக்குகளையும் அணைத்து விட்டு, தோட்டத்திலுள்ள திறந்த வெளிகள் போன்றவற்றில் சிறு விளக்குகளை எரிய வைத்து விடுங்கள். இரவில் மேலிருந்து பார்க்கும் விமான ஓட்டி, விளக்குகள் எரியும் இடங்களில்தான் குடிமனைகள் அதிகமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவ்விடங்களை நோக்கியே குண்டுகளை வீசுவார். எனவே, இதன் மூலம் உங்களது வீடுகள் காப்பாற்றப்படும் சாத்தியம் நிறைய உண்டு ஒரு முறை குண்டு போடப்பட்ட பின்னர் மீண்டும் விமானம் திரும்பி வருமாயின், ஏற்கனவே உங்களால் தயாரிக்கப் பட்ட போலிக் கொட்டில் அல்லது குப்பைக் கூழங்கள், டயர்கள் போன்றவற்றின் குவியல்களை நீங்களாகவே பற்ற வைத்து விடுங்கள். திரும்பி வரும் விமான ஓட்டி, தான் முதலில் குண்டு போட்ட இடங்களில் தான் நெருப்பு பற்றி எரிகிறது என்ற எண்ணத்தில் அவ்விடத்தை விட்டு வேறிடம் நோக்கிச் செல்வான்.

(தொடரும்)

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## இ[illegible]ணுவம் வெளியேற்றம்

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் சுமார் 6 மாத காலமாகக் குடிகொண்டிருந்த இலங்கை இராணுவம் தங்கள் [illegible]ருப்பிடங்களை விட்டு வெளியேறிச் சென்றுள்ளது. (46)

## பாக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

மற்றொரு படகு தமிழகத்தில் இருந்து வடக்கு நோக்கி வந்தபோது கடற்படையினர் மறித்தனர். அதில் பல லட்சம் ரூபா பெறுமதியான இந்திய சாறிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. நால்வர் கைது செய்யப்பட்டனர்.



# சீதனக் கொடுமையை ஒழித்துக் கட்ட

# விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி உறுதி

(யாழ்ப்பாணம்)

சீதனக் கொடுமை உட்பட பெண்களுக்கெதிரான சமூக அநீதிகளை ஒழித்துக்கட்டுவதுட்பட மொத்தம் பத்து அம்சங்கள் கொண்ட புதிய யாப்பு ஒன்றை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இரண்டாம் நாள் மாநாட்டில் நேற்று நிறைவேற்றப்பட்டன. இம் மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதிச் செயலாளரும் மகளிர் முன்னணி செயலாளருமான சுந்தரி தலைமை தாங்கினார்.

மகளிர் முன்னணியின் நேற்றைய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

1. தமிழீழ சமுதாயத்தில் நிலவும் பெண்களுக்கெதிரான சகல ஒடுக்கு முறைகளையும் அநீதிகளையும் களைந்தெறியப் போராடுவது.

2. பெண்களுக்கெதிராக பிரயோகிக்கப்படும் ஆதிக்க முறையையும் வன்முறையையும் எதிர்த்துப் போராடுவது.

3. சமூக அரசியல் பொருளாதார வாழ்வில் பாலியல் ரீதியாக பெண்களுக்கெதிராகக் காட்டப்படும் பாரபட்சங்களையும் அநீதிகளையும் சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடுவது.

4. கருத்துலக மூட நம்பிக்கைகளில் இருந்துஉருப்பெற்ற பெண்ணினம்பற்றியதவறான மதிப்பீடுகளையும் சிந்தனை வடிவங்களையும் எதிர்த்துப் போராடுவது.

5. பெண்ணினத்தின் கௌரவத்திற்கும் சுதந்திரத்துக்கும் இழுக்குத் தருவதும் சமூக சாபக்கேடாக விளங்குவதுமான சீதனக் கொடுமையை முற்றாக ஒழித்து விடப் போராடுவது.

6. தொழில் துறையிலும் சல்வித்துறையிலும் பெண்களின் சமத்துவத்தை நிலை நாட்டப் போராடுவது.

7. பெண்கள் மத்தியில் சமூக அரசியல் விளிப்புணர்வை ஏற்படுத்தி மகளிரிடையே தலைமைத்துவத்தை உருவாக்கப்பாடுபடுதல்.

8. இன ஒடுக்குமுறையாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் விதவைகள் அனாதைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் வகையில் பொருளாதாரத் திட்டங்களை அமைத்து செயல்படுதல்.

9. கட்சியின் அடிப்படை கொள்கைகளையும் மகளிர் முன்னணியின் குறிக்கோள்களையும் தமிழ் முஸ்லிம் பெண்கள் மத்தியில் எடுத்து விளக்கி மகளிர் முன்னணியின் தலைமையிலும் வழி நடத்தலிலும் தமிழீழ மாதர் சமுதாயத்தை அணி திரட்டுவது.

10. உலகமெங்கிலும் உள்ள முற்போக்கான மகளிர் இயக்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி நல்லுறவை வளர்த்து சர்வதேச ரீதியாக பெண்ணினத்தின் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் உழைத்தல்.

இவை அனைத்துடனும் மேலும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி பின்வரும் கட்டமைப்புடன் இயங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உறுப்பினர், சிற்றூர் அவைகள்வட்ட அவைகள், மாவட்ட அவைகள் பொதுக்குழு தலைமைச்செயற்குழு என்றகட்டமைப்பில் இம் முன்னணி இயங்கும்.

இம் மாநாட்டில் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மகளிர் முன்னணி பிரதிநிதிகளும் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவை எல்லாவற்றுடனும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைப் பீடத்தில் தற்போதுள்ள இருவரை விட மேலும் மகளிர் முன்னணியின் பங்கு அதிகரிக்கவும் பிரேரிக்கப்பட்டது. (லோ)

# துரிதமாக பிறப்புசான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பிறப்புச் சான்றிதழ் வழங்குவதிலுள்ள தாமதத்தை நீக்க யாழ். செயலகத்திற்கு புதிய போட்டோஸ்ரற் கருவிகள் இன்னும் சில நாட்களில் வந்து சேரவுள்ளன. யாழ். பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகநிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒன்றரை லட்சம் ரூபா இதற்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் இனிமேல் இருக்காது என்றும், மக்கள் சிரமமின்றி பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்க வேண்டியிருந்தது. முன்பிருந்த போட்டோஸ்ரற் இயந்திரமும் பழுதடைந்திருந்தது. இதனால் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இப் பிரிவில் தேங்கியிருந்தன. அவசர தேவைக்கும் இச் சான்றிதழ்களைப் பெற முடியாது அவஸ்தையுற்றவர்கள் இனி விரைவாக பிறப்புச் சான்றிதழ்களைப் பெறலாம். (மு)

## போராளிகளை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வேலணை மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோயிலின் அருகே

# றன்பேர்லி நூல்கள்

# கிராமப்புற வசதிகுறைந்தவர்களுக்கு மக்கள் வங்கி கடன் வழங்கவுள்ளது

(கொழும்பு)

கிராமப்புறங்களில் உள்ள வசதி குறைந்தவர்களின் நன்மை கருதி மக்கள் வங்கி கடன் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் செய்யவுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் எச். எம். எஸ். கருணாதிலகா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இத்திட்டத்தின்படி குறைந்த வருமானம் உடையவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திஅவர்களின் வறுமையைப் போக்குவதே என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிய அளவிலான விவசாயிகள், மற்றும் காணியற்றவர்களுக்கான கடன் திட்டம் ஆரம்பத்தில் சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

ரோமில் உள்ள விவசாயிகள் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் கனடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் என்பன இதற்கான நிதியை வழங்குகின்றன.

இக்கடன் மூலம் கிராமப்புறப் பெண்கள் தமது வருவாயை அதிகரித்துக் கொள்ள தொழில் முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

## ரயர் திருடன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலப்பைகளைத் திருடி வந்த நபர் ஒருவனை தமிழீழ விடுதலைப் புலிகள் மடக்கிப்

## உதவிகளை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர்களின் சம்மேளனம் (பாமிஸ்) கேட்டுக் கொண்[illegible] தற்கிணங்க, இஸ்லாமிய நாடு

## போர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

அடுத்ததாக விடுதலைப் புலிகளால்சென்றிகள் அமைக்கப்படுவதும், பலப்படுத்துவது பற்றியும் இராணுவ வட்டாரம் பிரஸ்தாபித்த போது கிழக்கிலங்கையில் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரிப்பதாலும், ஹெலி சப்டர் விமானங்கள் என்பவற்றின் நடமாட்டம் அதிகரிப்பதாகவும் தற்பாதுகாப்பு நடவடிக்கை குறித்தே இவ்வாறு பலப்படுத்தப்படுவதாக புலிகள் பதிலளித்தனர்.

அதே வேளை இலங்கை இராணுவத்தினரின் நடவடிக்கைகள், வீரர்கள் எண்ணிக்கை என்பன வடக்கு கிழக்கில் அதிகரிக்கப்படுவது பற்றி புலிகளால் விளக்கப்பட்ட போது இது ஒரு வழமையான படை மாற்றமே தவிர அதிகரிப்பு அல்ல என இராணுவ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் புலிகளின் கட்டுப்பாடு பெற்றே[illegible] நடமாட வேண்டியுள்ளது பற்றி கேட்டபோது விடுதலைப் புலிகளால் சிபார்சு செய்யப்பட்ட மாகாணசபைப் பொலிசார் சேவையில் அமர்த்தப்பட்ட பின்னரே பொலிசார் மீதுள்ள சட்டுப்பாடு விலக்குவது பற்றி ஆலோசிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி இராணுவ முகாமில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இலங்கை அரசின் சார்பில் ஜெனரல் சில்வா வடபிராந்திய இராணுவத் தளபதி, பிரிகேடியர் நமுனி ஆகியோருடன் வடபிராந்திய

## தனிநாயகம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமையும் என சிலை அமைப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அருட்திரு எ. ஸ். அமிர்தகுமார் அடிகளார் தெரிவித்தார். (62)

## கொழும்புத்

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

கொழும்பில் விற்பது இவரது வழக்கமாம். சிலரின் ஒத்தாசையுடன் பொருட்களின் பெறுமதியைக் குறைத்து மதித்து குறைவான தீர்வையும் கட்டி விட்டுச் சென்றுவிடுவார். என்று குற்றத் தடுப்புப் பிரிவு பிரதி ஆணையாளர் பி. டி. கே. பெர்நாந்தோ தெரிவித்தார்.

வர்த்தகரின் நடமாட்டத்தில் சந்தேகம் ஏற்பட்டதும், சுங்க அத்தியட்சகர் காமினி ராஜபக்ஸ இவர் இறக்குமதி செய்த பண்டங்களையும், அது தொடர்பான ஆவணங்களையும் ஒழுங்காகப் பரிசோதனை செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். பரிசோதனையின் போது கடத்தல் பொருட்கள் பிடிபட்டன.

விசாரணையின் பின் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ரூபா 4,72,000 தண்டம் விதிக்கப்பட்டது.

வர்த்தகர் கடத்தலை ஒரு தொழிலாக மேற்கொண்[illegible] உள்ளவர் என்று சுங்க அ[illegible] காரிகள் சந்தேகம் தெரிவித்தனர்.

அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்

யாழ். பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகநிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒன்றரை லட்சம் ரூபா இதற்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் இனிமேல் இருக்காது என்றும், மக்கள் சிரமமின்றி

மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்க வேண்டியிருந்தது. முன்பிருந்த போட்டோஸ்ரற் இயந்திரமும் பழுதடைந்திருந்தது. இதனால் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இப் பிரிவில் தேங்கியிருந்தன. அவசர தேவைக்கும் இச் சான்றிதழ்களைப் பெற முடியாது அவஸ்தையுற்றவர்கள் இனி விரைவாக பிறப்புச் சான்றிதழ்களைப் பெறலாம்.

(மு)

## போராளிகளை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வேலணை மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோயிலின் அருகே நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்தரங்கில் உரையாற்றிய மக்கள் முன்னணியின் வேலணைப் பொறுப்பாளர் திரு. மிரேஸ் குறிப்பிட்டார்.

வேலணை ஆறாம் வட்டார சிற்றூரவைத் தலைவர் திரு. பொ. மாசிலாமணி தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

(15)

## காட்டிக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் 99 வீதமான மக்கள் எமக்குஆதரவாகச் செயல் படுகின்றனர் மீதமுள்ள ஒரு வீதமானவர்கள் மக்கள் மத்தியில் இருந்து குழப்பத்தையும் வதந்திகளையும உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். இவர்களை மக்கள் அடையாளம் காண வேண்டும்.

பல இழப்புகளைத்தாண்டி வந்த காரணத்தினால் தான் நாம் இந்த நிலையை அடைந்துள்ளோம் தற்போது எமது பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்று வருகின்றன,

இது ஒரு இடைக்கால அமைதியேதான் அடுத்த கட்டப் போராட்டத்திற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்

கடந்த கால விளைவுகள் எதிர்காலத்திலும் ஏற்பட அனுமதிக்கக் கூடாது உண்மையானதும், உறுதியானதும், நேர்மையானதும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் பூரண ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று அவர் தொடர்ந்து பேசும்போது றிப்பிட்டார்

(தி)

# றன்பேர்லி நூல்கள் இம்முறை மட்டக்களப்புக்கு

(யாழ்ப்பாணம்)

லண்டனில் உள்ள றன்பேர்லி நூல் நிலையம் வருடாந்தம் வழங்கும் பொது நூலகங்களுக்கான நூல்கள் இம்முறை மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக்கு கிடைக்கவுள்ளன.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் இவை வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஏழு வருடங்களில் இவ்வாறு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் வழங்கப்பட்டன.

இம்மாதம் 25 ஆம் திகதி யாழ். பற்றீசியன் இன்ஸ்ரிரியூற், வேம்படி மகளிர் கல்லூரி, இணுவில் சைவ மகாஜனா வித்தியாலயம, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, பெரியகல்லாறு மத்திய மகாவித்தியாலயம், சுன்னாகம் போது நூலகம் என்பனவற்றுக்கு தலா 200 நூல்களும், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு 150 நூல்களும், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலலயத்துக்கு நூறு நூல்களும் வழங்கப்பட்டன.

## குரங்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த நாள் விசாரித்த போது பயிற்சி நடந்ததாம். அதனால்தான் அவ்வாறு வெடிக்கப்பட்டதாம் என்று கூறப்பட்டது. அதனால் மக்கள் மத்தியில் பீதி நிலவிகிறது.

(67)

## மாவட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சபையே பொறுப்பாக இருக்கும் எனவும் தெரிய வருகிறது.

வட-கிழக்கு மாகாணங்களில் பயிலுநர் ஆசிரியர்கள் அதிகளவில் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிடத்தக்க அளவில் ஆசிரியர் பற்றாக்குறை தீரவில்லை. இப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவே மாவட்ட மட்டத்தில் ஆசிரிய இடமாற்ற சபைகள் அமைக்கபபடவுள்ளன. சில பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களும் இச் சபையின் பணிப்பின் பேரில் இட மாற்றம் பெறுவர். இதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை கணிசமான அளவு குறைவடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(மு)

(கொழும்பு)

கிராமப்புறங்களில் உள்ள வசதி குறைந்தவர்களின் நன்மை கருதி மக்கள் வங்கி கடன் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் செய்யவுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் எச். எம். எஸ். கருணாதிலகா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இத்திட்டத்தின்படி குறைந்த வருமானம் உடையவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திஅவர்களின் வறுமையைப் போக்குவதே என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிய அளவிலான விவசாயிகள், மற்றும் காணியற்றவர்களுக்கான கடன் திட்டம் ஆரம்பத்தில் சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப் படும்.

ரோமில் உள்ள விவசாயிகள் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் கனடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் என்பன இதற்கான நிதியை வழங்குகின்றன.

இக்கடன் மூலம் கிராமப்புறப் பெண்கள் தமது வருவாயை அதிகரித்துக் கொள்ள தொழில் முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

## பருப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னவு கட்டளைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதே வேளை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தில் இருந்து சில உணவுப் பொருட்கள் தனியார் கடைகளுக்கு அதிக விலைக்குச் செல்வதா தெரிவிக்கப்படும் புகார்களையடுத்து விசாரணைகளும் நடைபெறுகின்றன.

## உள்ளூராட்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இதுவரைக்கும் தேர்தலைப் பற்றிய குறிப்பான அறிக்கை எதுவும் வெளியிட வில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும் இருந்தும் மிக விரைவில் உள்ளூராட்சி சபை தேர்தல்களை நடத்துவதற்கு ஆன அறிகுறிகள் தென்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(லோ)

## ரயர் திருடன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலப்பைகளைத் திருடி வந்த நபர் ஒருவனை தமிழீழ விடுதலைப் புலிகள் மடக்கிப் பிடித்து திருடப்பட்ட டயர்களையும் மீட்டெடுத்தனர்.

அந்த நபர் பொதுமக்களுக்கு இனம்காட்டப்பட்டு திருடிச் சென்ற இரு டயர்களுடன் காண்பிக்கப்பட்டனர்.

(53)

## அவகாசத்துக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலசிங்கம் அவர்கள் அமைச்சர் ஹமீத்துடன் நடந்த பேச்சுகள் பற்றி விபரம் தெரிவிக்கும்போது தற்போது மக்கள் மத்தியில் எழுந்துள்ள போர் சூழ்நிலை பற்றிய அச்சத்தை நீக்கி விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை அமுலுக்கு கொண்டுவர வேண்டும் என கேட்டதற்கு அமைச்சர் ஹமீட் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாக வாக்குறுதி வழங்கி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

நேற்று நடைபெற்ற இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரட்ணம் யோகி, அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ் மாவட்ட பிரதித் தளபதி ஜெயம், திருமதி பாலசிங்கம் ஆகியோர் பங்கு பற்றினர் இப் பேச்சுவார்த்தை மூன்று மணி நேரம் நீடித்தது.

விடுதலைப் புலிகளுடனான அடுத்த சந்திப்பை கொழும்பில் நடத்த ஜனாதிபதி விரும்புவதாக நேற்று நடைபெற்ற பேச்சுக்களின்போது அமைச்சர் ஹமீத் விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொண்டார் அடுத்து ஒரு வாரக் காலக்கெடுவுக்குள் ஜனாதிபதியின் அழைப்பு விடுதலைப் புலிகளுக்கு வந்தடையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார் இந்த அழைப்புடன் சந்திப்பு பற்றிய தேதியும் குறிப்பிடப்பட்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

## உதவிகளை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர்களின் சம்மேளனம் (பாமிஸ்) கேட்டுக் கொண்டதற்கிணங்க, இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு, அரேபிய கழகம் ஆகியன அரேபிய நாடுகளின் தலைவர்களுடன் ஸ்ரீ லங்காவுக்கான உதவிகளை அதிகரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் என்றார் அஹெமெட் அல் சரீப்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசாங்கம் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை இல்லாமல் செய்து பலஸ்தீனிய அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதால், அரேபிய நாடுகள் ஸ்ரீலங்காவுக்கான உதவியை அதிகரிக்க உலக இஸ்லாமிய சங்கத்தின்செயலாளர் அரபு நாடுகளில் தமது செல்வாக்சைப் பாவிக்கவேண்டும் என்று பாமிஸ் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள்.

## மீண்டும் பகு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கி வந்த வடமராட்சி கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்தினை உடனடியாக பருத்தித்துறை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து செயற்படும்படி உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு, மாகாண சபையினால் தனியான பிரதேச சபையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள போதிலும், மத்திய அரசாங்கம் வர்த்தமானியில் வடமராட்சி கிழக்கினை தனியான பிரதேச சபயாகப் பிரகடனப் படுத்தப்படாததினாலேயே, இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது

இதனையடுத்து. மருதங்கேணியில் இயங்கிவந்த, வடமராட்சி கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் உள்ள, பிரதேச சபை சம்மந்தமான சகல தாஸ்தாவேஜுகளும், பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

(36)

ரிகளால் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் புலிகளின் கட்டுப்பாடு பெற்றே நடமாட வேண்டியுள்ளது பற்றி கேட்டபோது விடுதலைப் புலிகளால் சிபார்சு செய்யப்பட்ட மாகாணசபைப் பொலிசார் சேவையில் அமர்த்தப்பட்ட பின்னரே பொலிசார் மீதுள்ள கட்டுப்பாடு விலக்குவது பற்றி ஆலோசிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி இராணுவ முகாமில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இலங்கை அரசின் சார்பில் ஜெனரல் சில்வா வடபிராந்திய இராணுவத் தளபதி, பிரிகேடியர் நமுனி ஆகியோருடன் வடபிராந்திய கடற்படைத் தளபதியும் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(லோ)

அது தொடர்பான ஆவணங்களையும் ஒழுங்காகப் பரிசோதனை செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். பரிசோதனையின் போது கடத்தல் பொருட்கள் பிடிபட்டன.

விசாரணையின் பின் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ரூபா 4,72,000 தண்டம் விதிக்கப்பட்டது.

வர்த்தகர் கடத்தலை ஒரு தொழிலாக மேற்கொண்டு உள்ளவர் என்று சுங்க அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்தனர்.


## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பரிபாலன சபை அறிவித்தல்

### தூக்குக்காவடி அடியார்களுக்கு!

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயத்தில் பொங்கல் தினத்தன்று தூக்குக்காவடி நேர்த்திக்கடன் செய்யவுள்ள அடியார்கள் பொங்கல் தினமான திங்கள் காலை 6-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை தங்களது தூக்குக்காவடி நேர்த்திகளைச் செய்துகொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம். இதன் பின் சனநெரிசல் காரணமாகவும், லைற் மின்சாரத்தடைப் பாதிப்புகள் காரணமாகவும், அடியார்களுக்கு அசௌகரியம் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டு, அன்றுமாலை 5-00 மணியின் பிற்பாடு தூக்குக்காவடிகளை ஆலய வீதியுள் அனுமதிப்பதில்லை என முடிவு செய்துள்ளபடியால் குறிப்பிட்ட காலநேரத்துக்குள் தமது நேர்த்திகளை முடித்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். தயவு செய்து இவற்றை அனுசரிக்கவும்.

### வியாபாரிகளுக்கு!

பொங்கல் தினத்தன்று ஆலய சூழலில் அனுமதிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய விரும்பும் சகல வியாபாரிகளும் 9-6-90 சனிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 10-6-90 ஞாயிறு மாலை 5-00 மணிவரை ஆலய பரிபாலனசபையின் வர்த்தகப் பிரிவில் உரிய வாடகை முழுமையையும் செலுத்தித் தமக்குத் தேவையான கடைகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

(கடைகள்பெறுவதில் தனிப்பட்ட சலுகைகள் அளிக்கப் படமாட்டாது)

வழமைபோல் ஆலயப் பிரதேசத்தில் விற்பனைக்குத் தடைசெய்யப்பட்ட பொருட்கள் பறிமுதலாக்கப்பட்டு அபராதமும் விதிக்கப்படும்.

11-6-90 திங்கள் காலை 6-00 மணிக்குப்பின் ஆலயவீதிக்கு வர எவ்வித வாகனங்களும் அனுமதிக்கப்படமாட்டா

### அம்பாள் அடியார்களுக்கு!

அம்பாள் கோயிற் திருப்பணி நிதிசேகரிப்பதற்காக வேறு எவ்விடத்திலும் எவரையும் யாம் நியமிக்கவில்லையாதலால் வற்றாப்பளை அம்பாள் ஆலயத் திருப்பணி பெயரில் நிதிசேகரிக்கவரும் போலிகளிடம் ஏமாற வேண்டாம் என்பதுடன் 11-6-90இல் நடைபெறும் பொங்கல் உற்சவத்திற்கு சகல இடங்களிலிருந்தும் பஸ்வாகனப் போக்குவரத்துஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளமையால் அம்பாள் அடியார்கள் அனைவரும் இப்பொங்கல் வைபவத்தில் கலந்து அருள்பெற்றுய்யுமாறு மகிழ்வுடன் அழைக்கின்றோம்.

நன்றி

பரிபாலனசபை

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயம்

1990-5-28

(R 314)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.